Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்



இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
(சி/2494)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 றஜப் 05 (22.08.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:324

# புலிகள் மீதான தொடரும் தாக்குதல்கள்; யுத்தத்துக்குள் இழுக்க செய்யும் சூழ்ச்சி!

## கொழும்பு அரசியல் வட்டாரத்தில் சந்தேகம்

(கொழும்பு)

***மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைக் குறிவைத்து நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் - புலிகளை ஆத்திரமூட்டி யுத்தத்துக்குள் இழுத்துவரும் நோக்கில் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் சூழ்ச்சித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் என கொழும்பு அரசியல் வட்டாரத்தில் சந்தேகம் கிளம்பியுள்ளதாக இணையத்தளத் தகவல் ஒன்று தெரிவித்தது.***

கொழும்பு அரசியல் அவதானி ஒருவரை ஆதாரம் காட்டி மேற்படி இணையத்தளம் வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா வெளியேற்றப்பட்ட பின்னர் மட்டக்களப்பு இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்றுவருகின்றன.

இத்தகைய தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். இறுதியாக நடந்த தாக்குதலில் அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா உயிரிழந்தார்.

இத்தகைய தாக்குதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் பலமுறை நோர்வே அரசு ஊடாகவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாகவும் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இத்தகைய தாக்குதல்கள் தொடர்வது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரித்திருந்தும் இத்தகைய தாக்குதல்கள் இராணுவப் பின்னணியுடன் இடம்பெற்று வருகின்றன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாவாவின் வித்துடல் மக்கள் அஞ்சலிக்கு!




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புல்லாவிச்சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோரத் தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப்பொறுப்பாளர் பாவா (செல்வராசா - ஜெகதீஸ்வரன்) புனர்வாழ்வுப் பொறுப்பாளர் யோகா (நாகலிங்கம்-யோகராசா) ஆகிய
(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆபத்தான நிலையை கடந்தார் வேணுகா!




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காயங்கேணியில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகளின் பெண் போராளி வேணுகா ஆபத்தான நிலையைத் தாண்டிவிட்டதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு காயங்கேணி வீதி
(12 ஆம் பக்கம் பார்க்க)

## பலம் மிக்க பெண்களின் பட்டியலில் சந்திரிகாவுக்கு 44 ஆவது இடமே!

(கொழும்பு)

போபஸ் நிறுவனம் சர்வதேச ரீதியில் நடத்திய கருத்து கணிப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட - உலகின் பலம்மிக்க - முக்கியமான பெண்களின் பட்டியலில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு 44 ஆவது இடமே கிடைத்தது.

போபஸ் சஞ்சிகை நேற்று முன்தினம் வெளியிட்ட இந்தப் பட்டியலில் -

அமெரிக்காவின் அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக மிக முக்கிய பதவியை வகித்து வரும் அமெரிகக ஜனாதிபதியின தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிசாரைஸ் இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.



சீனாவின் செல்வாக்கு மிக்க தொழில் அமைச்சர் யூ லீ இரண்டாமிடத்தையும்,

இந்தியாவின் இந்திரா காங்கிரஸ் கட்சியை ஆட்சி பீடம் ஏற்றிய அந்த கட்சியின் தலைவி சோனியா காந்தி இந்த வரிசையில் மூன்றாவது இடத்திற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

4 ஆவது இடத்தில் அமெரிக்காவின் தற்போதைய முதல் பெண்மணியான தவுராபுஷ் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் ஐந்தாவது இடத்தில் முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின மனைவியான ஹிலாரி கிளின்ரன் தெரிவாகியுள்ளார்.

உலகின் பலம்மிக்க பெண்மணிகளின் இந்த வரிசைப்பட்டியலில்
(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா லண்டனுக்கு விஜயம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று காலை தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்றார். எமிரேட்ஸ் விமானத்தில் டுபாய் நோக்கிச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா அங்கிருந்து லண்டன் பயணமானதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா நாடுதிரும்பும் வரை பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
(12 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமருக்கான பாதுகாப்பு அதிகரிப்பு!

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதல் முயற்சியையடுத்தே அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்பை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

அமைச்சர் கதிர்காமர் பயணம்
(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக்கொலை!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கல்முனையில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கல்முனை வாவிவீட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கல்முனைப் பொலிஸ் நிலயத்தில் பணியாற்றும் சார்ஜன்ட் ஜெயரட்ண (வயது - 42) என்ற பொலிஸாரே உயிரிழந்தவராவார்.

ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவருடன் சென்றுகொண்டிருந்த போதே இவர் மீது மிக நெருக்கமாக இருந்து தாக்குதல் நடத்தபபட்டது.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் மட்டக்களப்பு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சையளிக்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்தார்.

இவருடன் கூடச்சென்ற காமினி என்ற ஊர்காவலர் தாக்குதலில் இருந்து தப்பிவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் புகார் செயயப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

## குண்டு வெடிப்பில் ஊர்காவலர் பலி!

(கொழும்பு)

வெலிஓயா - நிக்கவெவ பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

ஊர்காவற்படையைச் சேர்ந்தவரின் வீட்டினுள்ளேயே குண்டு வெடித்ததாகத் தெரிவித்த பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாங்கேணியில் நடந்த தாக்குதலில் அதிகாரி உட்பட 2 படையினர் காயம்!

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாங்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில், இராணுவ அதிகாரி ஒருவரும், இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமடைந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று காலை 6.15 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் குறித்து மேலும் தெரியவருவதாவது -

மட்டக்களப்புக்கு வடக்கே 47 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மாங்கேணி இராணுவ முகாமுக்கு அருகேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்று கொண்டிருந்த மாங்கேணி இராணுவமுகாமில் பணியாற்றும் 552 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த கப்டன் விஜேரட்ன, சாதாரண சிப்பாயான தென்னக்கோன் ஆகியோர் மீது கிரனேட் வீசிவிட்டுத் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப் பட்டது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த இருவரும் உடனடியாக வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை
(12 ஆம் பக்கம் பார்க்க)


நல்லைக் கந்தனின் திருவீதியுலாக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் கார் விபத்தில் மானிப்பாய் வாசி பலி!

(சங்கானை)

ஜேர்மனியில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் மானிப்பாயைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தின்போது மானிப்பாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் ர...திரம் என்பவரே உயிரிழந்தார்.

குடும்பத்தினருடன் காரில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தபோது, கார் கட்டுப்பாட்டை இழந்து பாரிய மரமொன்றுடன் மோதியதில் குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இவருடன் பயணம் செய்த மனைவி மற்றும் மகள் ஆகியோரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(207)


நிரஞ்சனாஸ் சங்கானை
பிரசாந், ஐஸ்வர்யா, நாசர் நடித்த
ஜீன்ஸ்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே)
ROAD TRIP
(சி-2723)



நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், மீனா, சுவாதி நடிப்பில்
அன்பு சகோதரன்
24.08.2004 முதல் ஷாக்
(சி-2904)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே)



ராஜா யாழ்ப்பாணம்.

கமல், சினேகா...
வசூல்ராஜா MBBS
விரைவில் விஜய் நடித்த மதுர
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)


## இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்று காலை பெரிய அரசடி சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

கண்பரிசோதனை, இரத்த அமுக்கம், நீரிழிவு, தோல் நோய், வாய்ப்புற்று நோய் என்பவற்றுக்கான விசேட சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

சிகிச்சை பெற விரும்புவோர்கள் இன்று காலை மேற்படி இடத்தில் சிகிச்சை பெற்றுக் கொள்ளமுடியும் என லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்தனர்.(29)

## மாதாந்த உதவிப்பணம்!

பளை அஞ்சல் அலுவலகத்திலும் அதன் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சகல உப அஞ்சல் அலுவலகங்களிலும் ஆவணி மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம், புற்றுநோய், கசரோக உதவிப்பணம் கடந்த 13 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுவருகிறது. (21)

## மோட்டார் சைக்கிள் மோதி இளம் பெண் காயம்!

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் - இராசாவின் வீதிக்கு சமீபமாக நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்துச் சம்பவத்தில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார்.

இ.கோபிகா (வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது -

வீதியின ஓரமாகச் சென்றுகொண்டிருந்த மேற்படி இளம்பெண் மீது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த க.சதீஸ் என்பவரும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## வைரவிழா நிகழ்வு!

திருநெல்வேலி வாலையம்மன் சனசமூக நிலையத்தின் வைரவிழா நிகழ்வு இன்று மாலை 7 மணிக்கு நிலையத்தின் வைரவிழா அரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் சி.பத்மராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வின்போது வைரவிழா மலரினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி விசாகரூபன் வெளியிட்டுவைப்பார்.

## வருடாந்த மஹோற்சவம்!

வரலாற்று பிரசித்திபெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (207)

# மரண அறிவித்தல்

## ஆழ்வார்பிள்ளை மார்க்கண்டு



(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்- வல்லை நெசவு ஆலை. ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி - சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார்பிள்ளை மார்க்கண்டு 19.08.2004 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார்பிள்ளை - சிவகாமி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிர்காமு - சிவகாமி ஆகியோரின் அன்பு மருமகனும், கிருஷ்ணன் (சோமு), சிதம்பரம் ஆகியோரின் சகோதரரும், லீலாவதியின் அன்புக் கணவரும், தயாகரன் (ரஞ்சன் - கனடா), தயாமதி (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தயாநாதன் (ஜேர்மனி), தயாளகௌரி (டென்மார்க்), தயாகுமாரன் (கூட்டுறவு பரிசோதகர் - கூட்டுறவுத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), தயாளன் (டயாளன் என்ரபிரைஸ் நடமாடும் வாணிபம், கொழும்பு - யாழ். - கிளிநொச்சி), தயாநிதி (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி - கணிதம், 2 ஆம் வருட மாணவி), தயாரஞ்சினி (மாணவி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி (கனடா), வசந்தராசா (டென்மார்க்), ரஜீந்திரன் (மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசன்னா.(கனடா), பிரவின் (கனடா), சௌமியா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று - பூதவுடல் முற்பகல் 9 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(911)

தகவல்:
மா.தயாளன்
(மகன்)


## கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகள்

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகளினை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. பங்குபற்றுபவர்கள் கீழ்வரும் தலைப்புகளின் கீழ் தமது ஆக்கங்களினை 15.09.2004 இற்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கட்டுரை : பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 700 - 800 சொற்களுக்கு குறையாது எழுதப்படல் வேண்டும்.

1. கண்ணிவெடி நடவடிக்கையில் (Mine action) ஈடுபடும் நிறுவனங்களின் சமூகத்திற்கான பங்களிப்பு.
2. எமது சமூகத்தில் கண்ணிவெடி அபாயக்கல்வியின் முக்கியத்துவம்.
3. கண்ணிவெடியகற்ற எதிர்காலத்தை உருவாக்க மக்களின் பங்களிப்பு.

சித்திரம் - 'கண்ணிவெடிகளிலிருந்து எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்போம்' எனும் கருப்பொருளினை வெளிப்படுத்தவேண்டும்.

| பரிசு விபரம் கட்டுரை | பரிசு விபரம் சித்திரம் |
|---|---|
| 1 ஆம் பரிசு 6,500/= | 1 ஆம் பரிசு 7,500/= |
| 2 ஆம் பரிசு 3,500/= | 2 ஆம் பரிசு 5,000/= |
| 3 ஆம் பரிசு 2,500/= | 3 ஆம் பரிசு 3,000/= |
| இரு ஆறுதல் பரிசுகள் தலா 750/= | இரு ஆறுதல் பரிசுகள் தலா 750/= |

*போட்டி நிபந்தனைகள் பற்றிய விபரங்கள் நமது ஈழநாடு 15.08.04, உதயன் 16.08.04 பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்
இல : 63 பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பே.இல:- 021 222 5932

(சி/2962)



## யாழ்.நகரில் புதிய உதயம்
## K.K.போன் சேவிஸ்



இல.1, நவீன சந்தை மேல்மாடி, மக்கள் வங்கிக்கிளைக்கு அருகில், யாழ்ப்பாணம்

அனைத்துப் போன் வகைகளும் SIM காட், Kit காட் மற்றும் உதிரிப்பாகங்களை மலிவாகவும், தரமாகவும் பெற்றுக்கொள்வதோடு போன் பழுது, லொக் உடைத்தல், போன்றவற்றை துரித கதியில் பெற்றுக்கொள்ளவும்



உத்தரவாதத்துடன் புதுநிகளை பெறவும் நாடுங்கள்.

K.K.போன் சேவிஸ்



## யாழ். வணிகர் கழகம் நடாத்தும்
# யாழ். வர்த்தகக் கண்காட்சி 2004

### ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை
### யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இந்தக் கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள், கல்வி அறிவியல் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றி பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/2937)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையில் ஒப்பந்தம் உருவாக்கப்படவேண்டுமாம்

## மலையக முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவிப்பு



விடுதலைப் புலிகளால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்காத நிலையில், அரசாங்கம் முன்வைக்கும் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை ஆராயக்கூடிய நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் இல்லையென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நிரந்தர சமாதானத் தீர்வைக் ஏற்படுத்துவதாயின், விசேடமாக விடுதலைப் புலிகளுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் எனவும் - இது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும், ஜே.வி.பி.க்கும் தாம் எழுத்து மூலம் அழைப்பு விடுத்துள்ளதாகவும், இவ்விரு தரப்பும் தமது பதில் கருத்துக்களை தமக்கு அறிவிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இவ்விரு தரப்பினரையும் தாம் சந்தித்துப் பேச விரும்புவதாகவும், இதன்போது ஜே.வி.பி.யை சந்திப்பதற்கு விடுதலைப் புலிகளை தம்மால் சம்மதிக்கவைக்க முடியும் எனவும்- இந்த விடயம் தொடர்பாக ஜே.வி.பி. ஆராய்ந்து வருவது குறித்து, தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜப்பானிய தூதுவர் கிழக்குச் செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் சுக்கியோ சூடா இம்மாதம் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை கிழக்கு மகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ள ஜப்பானியத் தூதுவர் அங்கு அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் உட்பட பல்வேறு தரப்புடனும் கருத்துக்களைப் பரிமாற இருக்கின்றார்.

இந்த விஜயத்தின்போது - இவர் மாவட்ட இராணுவத் தளபதியையும் சந்திக்கவுள்ளார்.

# நீதிவான்களின் பாதுகாப்புக்கு விசேட பாதுகாப்புப் பிரிவு

நீதிவான்களின் பாதுகாப்புககாக விசேட பாதுகாப்பு பிரிவு ஒன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவின் ஊடாக, நாடு முழுவதும் உள்ள அனைத்து நீதிவான்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவுள்ள பாதுகாப்பு பிரிவை ஒத்ததாகவே இந்தப் பிரிவை அமைக்க தீர்மானித்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையின் கீழ் நீதிவான்களின் பாதுகாப்பு பிரிவை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் ஜோன் செனவிரட்னவின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பேச்சுவார்ததையில் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா, உயர் நீதிமன்ற மாவட்ட நீதிமன்றங்களைச் சேர்ந்த நீதிவான்களும், நீதிவான் சங்கத்தின் பிரதிநிதிகளும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

அண்மைக் காலமாக நீதிவான்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட பல்வேறு அச்சுறுத்தல்கள் குறித்து ஆராய்ந்து பார்த்த பின்னரே, இந்த விசேட பாதுகாப்பு பிரிவை அமைப்பதற்கு தீர்மானித்ததாக நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

இந்தப் பாதுகாப்பு செயற்திட்டத்துக்கு அமைய உயர் நீதிமன்ற நீதிவானின் பாதுகாப்பிற்காக இரண்டு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் அவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தல பாதுகாப்புக்காக மேலும் இரு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுமாக மேலும் நான்கு பேர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

### எம்.பிக்களின் பாதுகாப்பு தொடர்பாக

# தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சபாநாயகருக்கே உண்டு!

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சபாநாயகரிடமே உள்ளதென் பதால், அதன் பொருட்டு யாரும் அழுத்தம் கொடுக்க முடியாதென நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும், அவர்களைக் கைது செய்யும்போது நடவடிக்கை எடுக்கவேண்டியவிதம் பற்றியும் தீர்மானிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கே உள்ளதென கட்சித் தலைவர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பான திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு நாளைமறுதினம் பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளோடு கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நாடாளுமன்றத்துக்கு செல்ல அனுமதிக்காதது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

### பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக

# பதவி உயர்வு பெற்ற 165 பேர் இன்ஸ்பெக்டர்களாக பதவியிறக்கம்

(கொழும்பு)

பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்வு பெற்ற 165 பேர் மீண்டும் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக கடமையாற்றிய 165 பேரும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில், பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

எனினும், இவர்களின் பதவி உயர்வுகள் நீதிமன்றத்தின் உத்தரவின்படி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தற்போது பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இது தொடர்பான சுற்றுநிருபம் நேற்றுமுன்தினம் பொலிஸ் மா அதிபரால் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் ஊடாக அண்மையில் பிரதம பொர்லிஸ் இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்த நீதிமன்றம் குறிப்பிட்ட பதவி உயர்வுகளை இரத்து செய்யுமாறு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# படுகொலைச் சம்பவம் குறித்து குழு விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளரும், தற்போதைய நிர்வாகத்துறைப் பொறுப்பாளருமான பாவா என்றழைக்கப்படும் செல்வராசா ஜெகதீஸ்வரன் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் யோகா ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் மாங்கேணி மற்றும் காயங்கேணி இரண்டு இராணுவ முகாம்களுக்கு இடையில் உள்ள புல்லாவெளிச் சந்திக்கருகில் வைத்து நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் பாவாவும், யோகாவும் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து அறிவிக்கப்பட்டதையடுத்து மட்டக்களப்பு போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச்சென்று ஆரம்ப விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இவர்களுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் போராளி வேணுகா தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# இறுதித் தீர்வின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பியுங்கள்

## தேசிய பிக்குகள் முன்னணி

(கொழும்பு)

தமிழீழத்தைத் தோற்றுவிக்கும் இடைக்கால நிர்வாக அதிகார சபை வேண்டாம். இறுதித் தீர்வின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற தொனிப் பொருளில் உரை நிகழ்த்துவதற்காக தேசிய பிக்குகள் முன்னணியின் விசேட பொதுக்கூட்டமொன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் பேராசிரியர் அத்தங்கன ரத்னதேரா் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பொதுக் கூட்டத்தில் பெருமளவு புத்தபிக்குகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த அமைப்பினால் கொழும்பின் பல பாகங்களிலும் இடைக்கால நிர்வாகத்துக்கு எதிராகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் பரந்தளவில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன. (தே)

# சமாதான பேச்சை ஆரம்பித்தால் கடனுதவிகள் கிடைக்குமாம்!

இலங்கையை மீளவும் கட்டியெழுப்புவதற்காக குறிப்பிட்ட உதவித் தொகையை வழங்குவதற்கு, தாம் தயாராக இருந்தாலும், அதனைப் பெற்றுக்கொள்ள இலங்கை தயாராகவில்லை என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் வன்செயல்கள் பற்றி அமெரிக்க அரசாங்கத் திணைக்களத்தின் பிரதிச் செயலாளர் ரிச்சட் ஆர்மிரேஜ, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லனங்ஸ்ரீட் மேற்கொண்ட ஆலோசனைகளின் பின்னரே இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் எதிர்கால சமாதானம் மற்றும் எதிர்பார்ப்புக்களோடு கூடிய ஒன்றுபட்ட இனமாக பேச்சுவார்த்தைக்குத் திரும்புவதன் மூலமே, இலங்கைக்கான நிதியுதவி வழங்கப்படும்.

சமாதான செயற்பாடுகள் தொடர்பாக உண்மையான முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, விடுதலைப் புலிகள் வன்செயல்களை நிறுத்துவது என சொற்களிலும், எழுத்திலும் கொடுத்தால் மட்டுமே அது சாத்தியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### திருமலையில் புலிகளின் முகாம்

# கண்காணிப்புக்குழு தலைவர் ஜயந்த தனபாலவுடன் பேச்சு

திருகோணமலை துறைமுகத்தை இலக்கு வைத்து, விடுதலைப் புலிகள் பாதுகாப்பை பலப்படுத்தி வருவது குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் புறாவ் ஹெறாவ்டே அரச தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர், ஜயந்த தனபாலவைச் சந்தித்து நீண்ட நேரம் தற்போதைய நிலைமைகள் குறித்து அவர் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். திருகோணமலை துறைமுகத்துக்கு சமீபமாக விடுதலைப்புலிகள் புதிதாக முகாம்களையும், பாதுகாப்பு அரண்களையும் அமைத்து வருவதாகவும். விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கை யுத்தநிறுத்த மீறல் என்றும், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் கடற்படையினரிடம் ஏற்கனவே முறையிட்டனர். கடற்படையினரின் இந்த முறைப்பாடுகள் குறித்து, நேற்றுமுன்தினம் சமாதான செயலகத்தின் பணிப்பாளருடனான சந்திப்பின்போது நீண்ட நேரம் விவாதிக்கப்பட்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கிழக்கு மற்றும் தெற்கில் நடைபெறும், கொலைச் சம்பவங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாக அரசாங்க சமாதான செயலகத்தின் வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

### நிரந்தர சமாதானத்துக்கு

# ஒத்துழைப்பு வழங்க அவுஸ்ரேலியா தயார்

இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் யுத்தத்துக்கு ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக, இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் சிவ் தெரிவித்தார்.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சின் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இலங்கையில் நிலவிவரும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் பாராட்டுக்குரியது. இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு அவுஸ்ரேலிய அரசு தயாராக உள்ளது என்று தெரிவித்தார்.

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு அவகாசம்

சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்காக, மேலும் இரண்டு மாதகால அவகாசம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பாக அடுத்த வாரம் அமைச்சரவை அனுமதி பெறப்பட இருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம், சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

ஐந்து நாடுகளின் ஆயுத பாவனை தொடர்பான கொள்கைக்கு அமைய [illegible] ஆணைக்குழு ஒன்றை அமைக்க அமைச்சரவையின் அனுமதி கிடைத்திருப்பதாகவும் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையுடனான ஒருநாள் போட்டி

# தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுகளால் தோல்வி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 263 ஓட்டங்களைப் பெற்றது.

சிமித் 38, கிப்ஸ் 0, கலிஸ் 74, ருடோல்ப் 22, பொலக் 30, பௌச்சர் 58, குளுஸ்னர் 15, டுமினி 4, போயே 2, டௌசன் 3, என்ரினி 5 ஓட்டங்களைப் பெற்றனர்.

சமிந்த வாஸ் 4, சந்தன 2, ஜயசூர்யா, லொக்கு ஆராய்ச்சி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 265 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

குணவர்த்தன 51, ஜயசூர்யா 12, அத்தப்பத்து 64, சங்ககார 24, ஜெயவர்த்தன 19, டில்ஷான் (ஆட்



டமிழக்காமல் 38, சந்தன 5, வாஸ் 18, லொக்கு ஆராய்ச்சி ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் 23 உதிரி ஓட்டங்களை



தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் விட்டுக்கொடுத்தனர்.

என்ரினி 2 விக்கெட்டுக்களையும், பொலக், டௌசன், குளுஸ்னர், போயே ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## நவரத்திலோவா ஜோடி தோல்வியைத் தழுவியது



(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் மகளிர் இரட்டையர் ரெனிஸ் காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் மார்ட்டினா நவரத்திலோவா ஜோடி தோல்வியுற்றது.

லிசா ரேமண்டுடன் இணைந்து ஆடிய மார்ட்டினா 6-4, 4-6, 4-6 என்ற செட்களில் ஜப்பானின் ஷினோபு அசகோ, அய் சுகியாமா ஜோடியிடம் தோல்வியைத் தழுவினார்.

ரெனிஸ் உலகில் அடியெடுத்து வைத்து 30 ஆண்டுகளைக் கடந்துள்ள மார்ட்டினா - இந்தத் தோல்வி எனது கனவின் முடிவாக அமையாது எனத் தெரிவித்தார்.






துடுப்பு வலித்தலில் தங்கம் வென்ற இரட்டையர்



400 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டத்தில நான்காவது தெரிவுப் போட்டியில் அமெரிக்காவின் புறாடெரிக், பிரிட்டனின் டானியல் கெயின்ஸ், இலங்கை வீரர் ரோகன் பிரதீப் குமார ஆகியோர் ஓடுகின்றனர்.



பட்மின்டன் தனிநபர் ஆண்கள் பிரிவில் தங்கம் வென்ற இந்தோனேஷிய வீரர் தௌபீக் ஹிதய்த்.



ஜிம்னாஸ்டிக்கில் தங்கம் வென்ற அமெரிக்க வீராங்கனை

## ஐந்தாவது தங்கப் பதக்கத்தை அமெரிக்க வீரர் ஹெல்ப்ஸ் வென்றார்


(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் நீச்சல் பிரிவில் அமெரிக்கா தொடர்ந்து தனது முத்திரையைப் பதித்து வருகிறது. இந்தப் பிரிவில் அமெரிக்காவைச் சேர்ந்த 19 வயது வீரர் மைக்கேல் ஹெல்ப்ஸ் தனது தங்க வேட்டையைத் தொடர்ந்து வருகிறார். இவர் நேற்று நடந்த ஆண்களுக்கான 100 மீற்றர் பட்டர்பிளை பிரிவில் தங்கம் வென்றார்.

இது இந்தத் தொடரில் இவர் பெறும் ஐந்தாவது தங்கம். முன்னதாக, மார்க்ஸ்பிட்ஸ் 1972 ஆம் ஆண்டு முனிச் ஒலிம்பிக்கில் 7 தங்கம் வென்றிருந்தார். இந்த சாதனையை முறியடிக்க ஹெல்ப்ஸ் விரும்பினார்.

ஆனால், இந்த வாய்ப்பு கைநழுவிப் போனது. தற்போதைய நிலவரப்படி ஹெல்ப்ஸ் 5 தங்கம், 2 வெண்கலம், வென்றுள்ளார். இன்னும் இவர் 4x100 மெட்லே தொடர் நீச்சல் பிரிவில் பங்கேற்கவேண்டும்.

இதில் தங்கம் வென்றால், கலந்துகொண்ட அனைத்துப் பிரிவுகளிலும் பதககம் வென்ற பெருமையை இவர்



பெறுவார். மேலும், 1980 இல் ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்சான்டர் டிடெய்ன் 3 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 8 பதக்கங்கள் வென்றிருந்தார். தற்போது இந்தச் சாதனையை நோக்கி நீந்தத் தயாராகி வருகிறார் ஹெல்ப்ஸ்.




## உதைபந்தாட்ட பயிற்சி முகாம் நாளை ஆரம்பமாகிறது!

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டுக் குழுவினரால் யாழ். நகர பாடசாலை உதைபந்தாட்ட வீரர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று நாளை முதல் 25 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி முகாமில் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணி பயிற்றுநர் டி.சிறிசேனவும், அவருடன் வருகைதரும் குழுவினரும் யாழ். நகர பாடசாலை மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி முகாமை நடத்தவுள்ளனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்கு ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் 19 வயதுக்குட்பட்டோர், 17 வயதுக்குட்பட்டோர் மற்றும் 14 வயதுக்குட்பட்டவர்களில் இருந்து தலா 3 பேர் வீதம் கலந்துகொள்ளுமாறு பாடசாலைகளை சென்.பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (58)

### உதைபந்தாட்டப் போட்டி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் - லீக் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து டயமண்ட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

# மேற்கிந்தியத் தீவுகள் அணி நெருக்கடி நிலைக்குள் !

## இனிங்ஸ் தோல்வி காணுமா?

(லண்டன்)

ஓவல் மைதானத்தில் நடைபெறும் இங்கிலாந்து அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கக் கடுமையாகப் போராடவேண்டிய நிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் 7 விக்கெட் இழப்புக்கு 400 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்த இங்கிலாந்து அணி தொடர்ந்து விளையாடி 123.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து ஆட்டமிழந்தது.


முதல் இனிங்ஸில் இங்கிலாந்து



அணி 470 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுமுன்தினமே பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவுகள் அணி மளமளவென விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

இங்கிலாந்து பந்துவீச்சாளர் ஹர்மிசனின் பந்துவீச்சினால் மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் நின்றுபிடிக்க முடியாமல் தடுமாறினர்.

அணித்தலைவர் லாராவைத் தவிர ஏனைய வீரர்கள் எவரும் நின்றுபிடித்து ஆடமுடியாமல் ஆடு



களத்தை விட்டு வெளியேறினர்.

லாரா 79, கைல் 12, சந்தர்போல் 14, பிராவோ 16 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் இரட்டை எண்ணிக்கை ஓட்டங்களைக்கூட எடுக்கவில்லை.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் ஹர்மிசன் 6 விக்கெட்டுக்களையும், ஹோகாட், பிளின்ரொப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


9 விக்கெட் இழப்புக்கு 152 ஓட்டங்கள் என்ற நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸையும் ஆடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இரண்டாவது இனிங்ஸில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கைலும் ஜோசப்பும் இணைந்து நிதானமாக ஆடினர். கைல் அதிரடியாக ஆட ஜோசப் நிதானமாக எதிர்முனையில் நின்று பிடித்தார்.

ஆயினும், அணி 73 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது - ஜோசப் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். அடுத்து வந்த சர்வான் 7 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழந்து ஆடுகளத்தை விட்டு வெளியேறினார்.

அடுத்ததாக லாரா 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். அணி 155 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த கைல் 105 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் வந்த பிராவோ 20 ஓட்டங்களுடனும், சந்தர்போல் 7 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தனர்.



இரண்டாவது இனிங்ஸில் 39 ஓவர்கள் முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 4 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களைப் பெற்று தொடர்ந்து விளையாடிக்கொண்டிருக்கிறது.

ஹர்மிசன், அன்டர்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் தாக்கியதாக தெரிவித்து மனிதஉரிமை ஆணைக்குழுவில் புகார்

பொலிஸார் அச்சுறுத்தியதாக யாழ்.மனிதஉரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு குறித்துத் தெரியவருவதாவது-

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருட்டுச் சம்பவம் தொடர் பாக குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த சி.கஜேந்திரன் யாழ்ப்பாணப் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் பொலிஸாரால் கடுமையாகத் தாக் கப்பட்டு, துன்புறுத்தப்பட்டதாகத் தெரி வித்து அவரது தாயார யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.

இது குறித்த விசாரணைகளை நடத்திய யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவினா - இது தொடர் பாக கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத் துக்கு தெரியப்படுத்தினர்.

அத்தோடு இது ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் சம்பவமெனத் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக விசா ரணைகள் நடந்து வரும் நிலையில், குருநகர்ப்பகுதியில் உள்ள கஜேந் திரனின் வீட்டுக்குச் சென்ற வர்த்த கர் ஒருவர், மனித உரிமை மீறல் வழக்கை வாபஸ் பெறுமாறும், இல் லையேல் உயிருக்கு ஆபத்து நேரி டும் எனவும் அச்சுறுத்தியதுடன், தான் பொலிஸ் சார்பாகவே அங்கு சென்ற தாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அச்சமுற்ற முறைப்பாட்டுக்காரர் - தமது பாது காப்பு கேள்விக்குள்ளாகியிருப்பதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்தார். (ப)

## வெளிநாடுகளிலிருந்து

# திருப்பியனுப்பப்பட்டோர் விபரங்களை ஐ.ஓ.எம் அதிகாரிகள் திரட்டினர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டோர் தொடர்பாக ஆரா யும் பொருட்டு, ஐ.ஒ.எம் நிறுவனப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துகரு விஜயம் செய்த னர்.

ஐ.ஒ.எம் நிறுவனத்தைச் சேர்ந்த ஆலோசகர்களான பெற்றையட் லெப்றே, ஜீன்லான் ஓயி ஆகிய இரு வருமே நேற்றுமுன்தினம் யாழ்ப்பா ணத்துக்கு வந்தவர்களாவர்.

கடந்த காலங்களில் வெளிநாடு களில் தஞ்சமடைந்திருந்த சமயம் அந்த நாடுகளிலிருந்து திருப்பிய னுப்பப்பட்டவர்கள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும், பிறநாடுகளிலும் ஏற்பட்ட யுத்தங்களால் அங்கிருந்து வெளியேறியோரின் பிரச்சினைகள் தொடர்பாக இவர்கள் ஆராய்ந்தனர்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியி லுள்ள ஐ.ஒ.எம் நிறுவன அலுவல கத்துக்கும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் விஜயம் செய்த அவர்கள் - வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் குறித்த விபரங்களைப் பெற்றுச் சென்றுள்ள னர்.

அவ்வாறு வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்குவது குறித்து ஆரா யவுளளதாகவும் தெரியவருகிறது. (ப)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மானிப்பாய்ப் பிரதேச சபையினர் வறிய மாணவர்களுக்கு சுகாதாரப் பொதிகளை வழங்கினர். மாணவி ஒருவருக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா சுகாதாரப் பொதியை வழங்குவதைப் படத்தில் காணலாம். (91)

# அம்பாறையில் நடந்த கண்காட்சி யாழ். மாவட்டம் மூன்றாமிடம்

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத் தின் அனுசரணையுடன் அம்பாறை யில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி கண்காட்சியில் யாழ். மாவட்டம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தக் கண்காட்சியில் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்குட்பட்ட சகல மாவட்டங்களும் கலந்து கொண்டன.

இதில் சிறந்த ஆக்கங்களைச் செய்து காட்சிக்கு வைத்த முதல் மூன்று மாவட்டங்களுக்கும் சான்றி தழ்கள் வழங்கப்பட்டன.

இதன் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை அம்பாறை, திருகோணமலை, யாழ்ப் பாணம் ஆகிய மாவட்டங்கள் பெற் றுக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (113)

## தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சமய நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்கள் பங்குகொள்ளும் மாதாந்த சங்கம நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண் டபத்தில் நடைபெறும்

இதில் தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பிர தேச ஊரகப் பேராளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (24)

# சின்னஞ்சிறு செய்திகள்

## எழுதுநர்களுக்கான பயிற்சிநெறி

வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (NEERP) நிதி உதவியுடன் - ஸ்தாபன, நிர்வாகக் கடமைகள் தொடர்பில் எழுதுநர்களுக்கான பயிற்சிநெறி ஒன்று எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 வரை யாழ. செயலகக் கேட்போர் கூடத் தில் நடைபெறும். கலந்துகொள்ளும் அலுவலர்களுக்கான கடிதங்கள் ஏற்கெனவே அனுப்பிவைக்கப்பட்டுள் ளன. பயிற்சிநெறியில் கலந்து கொள்பவர்களுக்கான உணவு மற் றும் தேநீர் என்பனவும் வழங்கப் படவுள்ளது. (24)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக, உயர் தேசிய முகாமைத்துவ பட்டதாரிகளுக்கான அவசரமானதும், அவசியமானது மான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.30 மணிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், பட்டம் பெற்று வெளியேறிய அனைத் துப் பட்டதாரிகளும் இந்தக் கலந்து ரையாடலில் தவறாது கலந்துகொள் ளுமாறு ஒன்றிய செயலாளர் வி.தயா பரன் அறிவித்துள்ளார்.

## நூல்கள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ் நூல் நிலையத்துக்கான ஒரு தொகுதி நூல்கள் - நல்லூர்ப் பிரதேச சபையினரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். நூல் நிலையத்துக்காக ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்திய நூல்கள்- நல்லூர்ப் பிரதேச சபையினரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் பல்கலைக்கழ கத்தில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியிலேயே இந்த நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

## கொல்கள புனரமைப்புக்கு 53 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(வடமராட்சி)

அண்மைக்காலமாக வேரெணடை கொல்களம் பகுதி கவனிப்பாரற்று, சுற்றுப்புறச் சூழல் பெரிதும் மாச டைவதாக எழுந்த புகார்களைத் தொடர்ந்து - வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை கொல்களத் தைப் புனரமைத்து, சுற்றாடலை மாசுபடுத்தாத வகையில் சீர்செய் துள்ளதாகப் பிரதேசசபைச் செய லர் ஏ.எம்.ஜோசெப் தெரிவித்தார்.

மேலும் இந்தக் கொல்களம் புனரமைப்பதற்காக பிரதேசசபை 53 ஆயிரம் ரூபாவைச் செலவு செய் துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (13)

# வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான இடமாற்ற விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களிட மிருந்து 2005 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக 5 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் கடமை யாற்றியவர்கள் இந்த இட மாற்றத் துக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஐந்து வருடங்களுக்குக் குறை வான சேவை உடையவர்களும் விண ணப்பித்தால், பரிசீலிக்கப்படும் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்கள் அனுப் பப்படல் வேண்டும் எனவும், இட மாற்றங்கள் யாவும் அடுத்த வருடம் ஜனவரிமுதல் நடைமுறைப்படுத்தப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இடமாற்றம் பெறும் ஒரு அலு வலர் பதிலீட்டு உத்தியோகத்தர் வரும் வரை காத்திராமல், தனக்கு ரிய புதிய சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்பதற்கு ஏது வாக உடன் விடுவிக்கப்படல் வேண் டும் எனவும் மாகாண காணி ஆணை யாளர் தெரிவித்துள்ளார். (24)

## உணவு நிலையங்கள் அனுமதி பெறவேண்டும்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய மஹோற்சவத்தின்போது - சிற்றுண்டி வகை, ஐஸ்கிறீம் கடை கள் மற்றும் உணவு வகைகளை வியாபாரம் செய்ய விரும்புபவர்கள், குறித்த உணவுப்பண்டங்களைத் தயாரிக்கும் நிலையங்கள் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட உத்தர வுப் பத்திரத்தின் நிழற்படப் பிரதி அல்லது அந்தப் பகுதி சுகாதாரப் பரிசோதகரின் சிபாரிசு கடிதத்துடன் வருபவர்களுக்கு மாத்திரமே வியாபா ரம் செய்ய அனுமதி வழங்கப்படும் என்பதையும் நோய்கள் பரவாதிருக்க இந்த விடயத்தில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறும் வலி. வடக்கு பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

## நல்லூர் கோட்ட பாடசாலைகளில்

# தரம் ஐந்து முன்னோடிப் புலமைப் பரீட்சையில் உயர் புள்ளிபெற்ற 20 மாணவர்களுக்குப் பரிசு

(சுதுமலை)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களுக் கான முன்னோடி புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் உயர்புள்ளிகளைப் பெற்ற 20 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட வுள்ளது.

நடந்து முடிந்த தேசியமட்டப் பரீட்சையில் மாவட்ட வெட்டுப்புள் ளிக்கு மேலாகப் பெறுகின்ற சகல மாணவர்களுக்கும், கோட்டமட்டப் பரிசு வழங்கப்படுவதுடன் - ஆசிரியர், மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

சகல பாடசாலைகளிலும் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒவ் வொருவருக்கும் பரிசில்கள் வழங்குவதுடன் அவர்களை ஊக்குவித்த தரம் 5 ஆசிரியர்களும் - பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்படவுள்ளதாக உடுவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்துள் ளார். (91)

# வீதி திருத்தம் குறித்து கிராம மக்கள் விசனம்

கடந்த இரு தசாப்த காலத்துக் கும் மேலாக திருத்தப்படாதிருந்த வண்ணார் பண்ணை மேற்கு முருக மூர்த்தி வீதியானது, இந்தப் பகுதி மக்களது பலத்த வேண்டுகோளின் மத்தியில், யாழ்.அரசஅதிபரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, யாழ். மாநகர சபையால் ஒப்பந்த அடிப் படையில் வழங்கப்பட்டு, தற்போது திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் பராமரிப் பின்மை காரணமாக மிக மோசமாக சீர்கெட்டுக் கிடந்த இந்த வீதி மீது- கற்கள் பரப்பப்பட்டு, பாரஊர்தி கொண்டு மிதிக்கப்பட்டு தார் ஊற் றப்பட்டு வருகிறது.

எனினும், பரப்பப்படும் கற்களின் மேல் நீர் ஊற்றி அதன்பின் பார ஊர்தி கொண்டு மிதித்து தார் ஊற் றுவதே இந்த வீதியினது நீண்ட கால பயன்பாட்டுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

இது தொடர்பாக அப்பகுதி மக் கள் யாழ் மாநகர சபையுடனும், வீதி அபிவிருத்தி அதிகார சபையுடனும் தொடர்பு கொண்டும் - அவர்களது இந்தக் கருத்து கவனத்துக்கு எடுக்கப் படவில்லை என்றும் தெரிவிக்கப்படு கிறது. (31)

## அன்பளிப்பு

கடந்த ஞாயிற்றுக்கிழமை (15.08.2004) கூவில் தீபஜோதி சன சமூக நிலையத்திற்கு சி.மனோ கரன் என்பவர் கணினி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்

இந்தக் கணினியானது கூவில் தீபஜோதி சனசமூக நிலைய முன் னாள் தலைவர் ஆ.கி.தம்பித்து ரையிடம் கையளிக்கப்பட்டது. (12)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, முகாமையாளர் என்.சீவரெத்தினம் மாவட்ட முகா மையாளராகப் பதவி உயர்வு பெற் றுள்ளார். (64)

# மாதத்தில் ஒரு ஞாயிறு அன்று மட்டுவில் பகுதியில் சிரமதானம்

(மட்டுவில்)

ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வடக் குப் பகுதியில் உள்ள வீதிகள், பொது இடங்கள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாசாலையில் இடம் பெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

மட்டுவில் வடக்கு கிராம அலுவ லர் சி.கனகரத்தினம் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் - மட்டுவில் வடக்கைப் பிரதிநிதித்து வப்படுத்தும் பொது அமைப்புக்க ளின் பிரதிநிதிகள், மற்றும் பொது மக்கள் எனச் சுமார் 100 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

மட்டுவில் வடக்கு மக்களினது ஒற்றுமையையும், பொது நோக்குச் சிந்தனையையும் வெளிக்கொணரும் வகையில் இந்தச் சிரமதான நட வடிக்கையை மேற்கொள்ளுமாறு கிராம அலுவலர் விடுத்த வேண்டு கோளை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையினரும், அரசியல் துறையி னரும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் - மட்டுவில் வடக்கு ஊரகக்கிளையும், புனரமைப்புச் செய்யப்பட்டு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (24)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அரங்கம்



## உள்ளங்களில் ஏனோ பெருமூச்சு



ஷோன்பொலக் சிங்கம் பற்றித் தெரியுமா

தென்னாபிரிக்க அணி இலங்கை அணியிடம் டெஸ்ட் தொடரை இழந்ததன் மூலம், வெளிநாட்டு மண்ணில் தொடரைக் கைப்பற்றும் சிமித்தின் கனவும் கனவாகிப்போனது.

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் ஏற்பட்ட தோல் விகளையடுத்து தலைமைப் பொறுப்பை பொலக்கிடமிருந்து பெற்றார் சிமித். அவரது தலைமையின் கீழ் இதுவரை சொந்த மண்ணில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை மாத்திரமே வென்று தொடரைக் கைப்பற்றியுள்ளது தென்னாபிரிக்க அணி.

வெளிநாட்டு மண்ணில் இங்கிலாந்து, நியூஸிலாந்துடனான டெஸ்ட் தொடர்களை சமப் படுத்தியும், பாகிஸ்தானுடனான தொடரில் தோல் வியும் அடைந்திருந்தது.

அதனால், இலங்கை அணியுடனான போட்டியிலாவது வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்ற வேண்டுமென சிமித் எண்ணியிருந்தமை வியப்புக் குரியதொன்றல்ல.

அவுஸ்ரேலிய அணிக்குச் சமதையாகவும், அதனைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரே அணியாகவும் வளங்கிய தென்னாபிரிக்க அணி, இன்று இலங்கை அணியிடம் மண்கௌவியது சற்று யோசிக்க வைக்கிறது.

பொதுவாக அவுஸ்ரேலியாவுக்கு அடுத்து டெஸ்ட் தரப்படுத்தல் வரிசையில் இரண்டாமிடத்திலிருக்கும் தென்னாபிரிக்க அணி, இலங்கைக்கெதிரான தொடருக்கு முன்பு மூன்றாமிடத்துக்குப் படியிறங்கியிருந்தது. இங்கும் தொடரை இழந்ததன் மூலம் அது 4, 5 ஆவது இடங்களுக்குப் பின்தள்ளப்படலாம். இந்த நிலை ஏற்படக் காரணம் என்ன?

தென்னாபிரிக்க அணியினர் பிடிகளைத் தவறவிட்டு எதிரணியினர் வரலாற்று வெற்றி பெறக் காரணமாயிருக்கும் துரதிஷ்ட நிலைக்கு உள்ளாகுபவர்கள். அதற்கு 1999 ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் ஸ்ரீவ்வோவின் பிடியை தவறவிட்ட கிப்சையும், 2003 உலகக் கிண்ணப் போட்டியில் ஸ்ரீபன் பிளமிங்கின் பிடியைத் தவறவிட்ட பௌச்சரையும் உதாரணமாகக் கூறலாம். அந்த வரிசையில் இப்போது சங்ககாரவின் பிடியைத் தவறவிட்ட கலிஸும் இணைந்து கொண்டார்.

பொப்வூல்மரின் பயிற்சியின் கீழ் பட்டைதீட்டிய வைரங்களாய் ஜொலித்த தென்னாபிரிக்க அணி அவர் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகியதும், முன்பிருந்த அணியொற்றுமையும் வீரர்களிடையேயான புரிந்துணர்வு எண்ணமும் தொலைந்து போய்விட்டதென்றால் அது மிகையில்லை. இதற்குச் சரியான உதாரணம் குளுஸ்னரின் மீள் வருகை விவகாரம். அதாவது தற்போதைய அணியில் இடம்பெறுவதற்கு கப்டன் சிமித்தின் தலையீட்டோடு அவர் போட்ட எதிர்நீச்சல் கொஞ்ச நஞ்சமல்ல.

அத்துடன் கிப்ஸ் போன்ற மூத்த வீரர்கள் சிமித்தின் தலைமையில் விளையாட ஆரம்பத்தில் தயக்கம் காட்டி, கருத்து முரண்பட்டதும் மனங்கொள்ளத்தக்கது.

மேலும் கெரி கேர்ஸ்ரன், அலன் டொனால்ட், ஜொன்ரி ரோட்ஸ் போன்றோரின் ஓய்வு அணிக்கு சிறிது பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும் அது முற்று முழுதாக அணியின் இன்றைய நிலைக்குக் காரணமென்று கூறிவிட முடியாது.

ஏனென்றால் ஆசிய நாடுகளைப் போன்றதல்ல தென்னாபிரிக்க அணி.

ஆசிய நாடுகளில் அத்தி பூத்தாற் போல் விளங்கும் ஒரு சிறந்த வீரர் ஓய்வு பெற்று விட்டால் அந்த இடத்தை நிரப்ப இன்னொருவர் வர நீண்டகாலம் பிடிக்கும். உதாரணத்துக்கு இந்தியாவை எடுத்துக் கொண்டால் கபில்தேவுக்குப் பிறகு இன்னுமொரு வேகப்பந்து வீச்சாளர் தோன்றவேயில்லை.



சிமித்
சுமை சுகமானது

ஆனால், தென்னாபிரிக்க அணியைப் பொறுத்தவரையில் இவ்வாறானதொரு நிலை அங்கில்லை. ஏனென்றால் காலத்துக்குக் காலம் சிறந்த பந்துவீச்சாளர்களும், துடுப்பாட்ட வீரர்களும் தோன்றிய வண்ணமே இருப்பர். இதனைக் கடந்தகால அணியின் பெறுபேறுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அத்துடன் அணியின் தலைவரைக் குற்றஞ்சாட்டுவதோ இல்லை தலைமைப் பதவியை மாற்றுவதோ அவசியமற்றது. காரணம் சிமித் தலைமைப் பொறுப்பை சுமையாகக் கருதவில்லை. பல்வேறு அழுத்தங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து சிறப்பாகவே செயற்பட்டு வருகிறார்.

அதற்குச் சிறந்த உதாரணமாக இங்கிலாந்துக்கெதிரான தொடரில் அடித்த தொடர்ச்சியான இரண்டு இரட்டைச் சதங்களும் அதைவிட ஒவ்வொரு தொடரிலும் தனது தனித்துவமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வந்தமையையும் குறிப்பிடலாம்.

எனவே எத்தனை புயல்களைச் சந்தித்தாய் என்பது முக்கியமல்ல. கப்பலைக் கரைசேர்த்தாயா என்பதுதான் முக்கியம். அதுபோல பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ள சிமித் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருநாள் தொடரையாவது கைப்பற்றுவாரா?

- விமலன்



தொட்டுப்பார்க்க ஆசை

ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்துச் சென்றது பெரும்பான்மையோருக்கு சம்மதமில்லை தான். இன்று ஈராக்கில் ஏற்பட்டுள்ள இரத்தக் களரி இதயத்தில் இரத்தம் வடியச் செய்கிறது. ஆனாலும் விளையாட்டு என்று வரும்போது ஏதோ ஒத்தடம் கொடுத்தது போன்ற சுகமான உணர்வுகளும் ஏற்படவே செய்கின்றன.

உதைபந்தாட்டத்தில் யூரோ 2004 போட்டிகளில் இரண்டாமிடம் பெற்ற போர்த்துக்கலை ஈராக் 4-2 என்றவாறு தோல்வியடையச் செய்தது அற்புதம். தொடர்ந்து கோஸ்ராரீகா அணிக்கும் தண்ணி காட்டியிருக்கிறார்கள் ஈராக் உதைபந்தாட்ட அணியினர். வாழ்த்துக்கள் ஈராக் நாட்டுக்கு.

இதேவேளை செப்ரெம்பரில் இங்கிலாந்தில் நடைபெறப்போகும் ICC சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளும் ஐக்கிய அமெரிக்க கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு தலையான செய்தி ஐக்கிய அமெரிக்க அணியில் நான்கு வீரர்கள் நியூயோர்க்கைச் சேர்ந்தவர்கள் நான்கு பேர் புளோரிடாவைச் சேர்ந்தவர்கள். மேற்கிந்திய முன்னாள் டெஸ்ட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிளேரன் லம்பெட் ஒரு அங்கத்தவர். பயிற்றுனர்கள் மேற்கிந்திய வீரர்களான பாவூத் பக்கஸ் மற்றும் கென்னத் பெஞ்ஜமின்.

அமெரிக்கா - நடைபெறவிருக்கும் 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இரண்டு


## சோகத்திலும் சுகம் தரும்...

ஆட்டங்களை தம்மண்ணில் நடத்துகிறேன் என்று ஆர்வமாகக் கேட்கத் துணிந்தவர்கள் அதேபோல் 1994 இல் உலகமே வியக்கும் வண்ணம் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தி முடித்தவர்கள். அந்த வகையில் பொன் கொழிக்கும் அமெரிக்காவில் தொட்டதெல்லாம் பொன் கொழிக்கும் எனவே கிரிக்கெட் விளையாட்டை வாலாயம் செய்து கொள்ளும் ஆற்றல் அவர்களிடம் உண்டு.

அவுஸ்ரேலிய, நியூசிலாந்து அணிகள் கொண்ட குழுவிலேயே ஐக்கிய அமெரிக்காவும் இடம் பெற்றுள்ளது.


செப்ரெம்பர் விரைவில் வந்துவிடும். ஐக்கிய அமெரிக்கா என்ன மாதிரி ICC சம்பியன்ஸ்ஷிப் போட்டிகளை எதிர்கொள்ளப் போவ தென்பதும் ஒரு சுவையான எதிர்பார்க்கை தான்.

- நிர்மலன்.



ரவிசாஸ்திரி
அமெரிக்கா நீயுமா

## நிலவுக்கும் ஒருநாள் ஓய்வுண்டு



பிறைன் லாரா - சர்வான்

இங்கிலாந்தில் விளையாடிய மூன்று டெஸ்ட் போட்டிகள் தோல்வி. தொடரின் ஆட்டங்கள் தொடர்ந்து நடந்தாலும் ICC சம்பியன்ஷிப் போட்டிக்கான மேற்கிந்திய அணி பற்றிய அறிவிப்பின் அவசியம் மேற்கிந்தியத் தேர்வுக் குழுவுக்கு இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் யார் என்பதைத் தீர்மானிப் பதில் ஏற்பட்ட தாமதம் பல விடயங்களை எடுத்துக்காட்டியுள்ளது. அதாவது அணித் தலைமை பிறைன் லாறாவின் கையில் இருப்பதில் தேர்வுக் குழுவுக்கு அவ்வளவு திருப்தியில்லை என்பது வெளிப்படையாயிற்று. இது லாராவின் மனதிலும் ஒரு [illegible] தற்போது இன்னும் இரண்டு வாரங்கள்

மிகுதி டெஸ்ட் போட்டி பற்றிச் சிந்திக்கவேண்டியுள்ளது என்றுமட்டும் கூறியுள்ளார். தாமதமாக ICC கிண்ணத் தலைமை லாறாவுக்குக் கிடைத்தாலும், தற்போது அவரது நிலை வேண்டாப் பெண்டாட்டி நிலைதான். லாராவுக்கு இரண்டாவது முறை தலைமைத்துவம் கொடுக்கப் பட்டது அவர் மீது கொண்ட நம்பிக்கையால் தான். ஆனால் அவரால் அதனைச் சரிவர நிறைவேற்ற முடியாது போயிற்று என்பதே உண்மை. ஏனெனில் இரண்டாவது தலைமையில் விளையாடிய டெஸ்ட் போட்டிகள் 38. வென்றது 10. தோற்றது 21. அதுமட்டுமல்ல ஒரு விமர்சகர் குறிப்பிட்டது போல இறுதியில் பங்களாதேஷ் அணிக்குச் சவால் விடும் நிலையில்தான் லாறாவின் நிலை இறங்கிப் போய்விட்டது. இறுதியாக நடைபெற்ற 10 டெஸ்ட் போட்டிகளில் எட்டில் தோல்வி. மறுபுறம் ஏறத்தாழ முப்பதுகளைக் கடந்த ரிட்லி ஜேக்கப்ஸ் அணியில் இருந்து நீக்கப்பட்ட அதே வயதில் நிற்கின்றார் லாறா. மேலும் மிக இளவயது நிரம்பிய வீரர்கள் நிறைந்த அணியில் லாறா கூட முதியவரே என்ற துர்ப்பாக்கிய நிலை. இறுதியாக ராம் நரேஷ் சர்வான் அடுத்த தலைமைக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள நிலை. எனவே லாறா அணித் தலைமையை விடவேண்டிய கட்டம் உறுதியானதுதான். என்றாலும் இந்த நிமிடம்வரை குறைந்து போகாத தனது துடுப்பாட்டத் திறமையை தொடர்ந்தும் ரசிகர்களுக்கு அளிப்பாரா?

- மரியா.




ராம்நரேஷ் சர்வான்
வா தலைவா வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருசில உள்ளத்தில் சுவைப்பேச்சு

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெற்ற தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மகத்தான சாதனை ஒன்றைப் படைத்துள்ளார் இலங்கை அணியின் கப்டன் மாவன் அத்தபத்து.

இலங்கை டெஸ்ட் வரலாற்றில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடரை இலங்கை அணி கைப்பற்றியமை இதுவே முதற் தடவையாகும். சீரற்ற கால நிலை இலங்கை அணியின் வெற்றி வாய்ப்பைத் தடுத்து விடுமோ? என இலங்கை ரசிகர்கள் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பத்தில் தென்னாபிரிகக அணியை 313 ஓட்டங்களால் தோற்கடித்து தமது பலத்தை மீண்டும் நிலை நாட்டியுள்ளனர் இலங்கை அணியினர்.



அத்தபத்து கிண்ணத்தை ஏந்துகிறேன்

493 என்ற கடினமானவெற்றி இலக்கை நோக்கி தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு நான்காம் நாள் ஆட்டத்தின் போது காலநிலை சற்றுக் கைகொடுத்தது.

சீரற்ற காலநிலை காரணமாக நான்காம் நாள் ஆட்டம் 8 ஓவர்கள் மட்டும் வீசப்பட்ட நிலையில் கைவிடப்பட்டது. நான்காம் நாள் ஆட்ட முடிவில் தென்னாபிரிக்க அணி 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந திருந்தது.

சீரற்ற கால நிலை போட்டியைச் சம நிலைப்படுத்துவதற்கான சமிக்ஞையை வழங்கிய போதும, கிப்ஸ்;சிமித், கலிஸ், ருடோல்ப், டிப்பென்னர், பௌசசர் ஆகிய சிறந்த துடுப்பாட்டக்காரர்களை கொண்டிருந்த தென்னாபிரிக்க அணி தோல்வியைத் தழுவியமைக்கு இலங்கை அணி அனைத்துத்துறையிலும் பிரகாசித்தமையே காரணமாகும்.



மஹேல - டைசன்
அடுத்த இரட்டைச்சதம் எப்போ

இலங்கை அணியின் களத்தடுப்பு, பந்துவீச்சு, மற்றும் துடுப்பாட்டம் ஆகிய அனைத்தும் சிறப்பாகவே அமைந்திருந்தது.

குறிப்பாக இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டனர்.சமிந்தவாஸ், புதுமுகம் லசித மாலிங்க, ஜயசூரிய ஆகியோர் மிகவும் சிறப்பாகப் பந்துவீசினர்.

5 ஆம் நாள் ஆட்டத்தின் போது தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர்களை திணறடித்த சமிந்தவாசும், மாலிங்கவும் எந்த ஆடுகளத்திலும் தாம் சாதிப்போம் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

எஸ்.எஸ்.சி மைதானத்தைப் பொறுத்தவரையில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கே சாதகமானது. டெஸ்ட் வரலாற்றிலே அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ள இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன், தனது டெஸ்ட் விக்கெட்டுக்களில் 100 இற்கு மேற்பட்டவற்றை எஸ்.எஸ்.சி மைதானத்திலேயே கைப்பற்றியுள்ளார். ஆனால், இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் எஸ்.எஸ்.சி மைதானம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கே சாதகமானது என்ற கருத்தை மாற்றியமைத்து விட்டனர்.

கடந்த சில காலங்களில் பல வீழ்ச்சிகளைக் கண்ட இலங்கை அணி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளமை மகிழ்ச்சியான விடயமே.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டுள்ள இலங்கை அணி - தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒரு நாள்தொடரையும் கைப்பற்றிச் சாதனை படைக்கும் என்பது உறுதி.

- லெஸ்லி

# மனங்களில் இருந்தே மறைந்துவிட்டார்

அமெரிக்க ஜனாதிபதி புஷ் கேட்டாலும் ஓடமாட்டேன் என்று ஏதென்ஸில் இருந்து சுசந்திகா சுறியதாக ஒரு பத்திரிகைச் செய்தி. அதுவும் ஏதென்ஸில் ஒலிம்பிக் திருவிழாவின் ஆரம்ப நிகழ்வுக்குச் சென்றிருந்த இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளுக்குக் கிடைத்த நேரடியான பதிலாக இல்லாவிட்டாலும் - அது அவருக்குத்தான் விடுக்கப்பட்டிருந்தது என்பதை ஊகித்துக்கொள்வது கடினமாக இருக்காது.

நான்கு வருடங்களுக்கு முன் சிட்னியில் சுசந்திகா 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலம் வென்றதென்பது 1948 இல் லண்டன் ஒலிம்பிக்கில் 110 யார் தடைதாண்டலில் டங்கன்வைட் வெள்ளிப் பதக்கம் பெற்றபின் 52 வருடங்களின் பின் அதிஉயர் திருவிழாவில் சுசந்திகா பெற்ற பதக்கம் அது. அந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் முதல் பிரஜை அவராகவே இருந்தார்.

இதெல்லாம் போக இடைப்பட்ட நான்கு வருடங்களில் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் சுசந்திகா பதக்கம் வெல்வார். அதற்கான முயற்சிகளில் தான் ஈடுபடுவார் என்றே இலங்கை மக்கள் எதிர்பார்த்தார்கள். அது அவர்களின் உரிமையும் கூட. ஆனால் இடைப்பட்ட காலத்தில் இவர் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சைகள் பற்றிப் பத்திரிகைகள் விலாவாரியாக எழுதியிருக்கின்றன. எழுதப்படும் எல்லாமே பொய்யாகவோ, மிகைப்படுத்தப்பட்டதாகவோதான் இருக்கும் என்று புறந்தள்ளிவிடவும் முடியாதல்லவா?



சுசந்திகா
ரொம்ப ஓவராப் போயிட்டீங்க

இலங்கையின் சார்பாக ஏதென்ஸ் போட்டிக்குச் செல்லும் குழுவின் தலைவி. அதாவது நாட்டின் கொடியேந்திச் செல்லும் பெருமை இவருக்கே வழங்கப்பட்டிருந்தது. இப்போது சுசந்திகா இடிவிழுந்தது போன்றஒரு செய்தியைக் கூறியுள்ளார். அதாவது தான் ஒலிம்பிக் போட்டிகளில் ஓடப் போவதில்லை என்பதே அது. அதற்குத் தனது உடற்தகுதிக் குறைகளைக் காரணம் காட்டுகிறார் சுசந்திகா. அவர் கூறுவதை யாரும் நம்பத்தயாரில்லை. இவர் திட்டமிட்டே இப்படியான செயலைப் புரிந்துள்ளார் என்றே விடயம் அறிந்த எல்லோரும் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறார்கள்.

ஒன்று புரிகிறது. இவரது சர்வதேச தடகள வாழ்க்கை இத்துடன் முடிகிறது என்பது தான் அது. அத்தோடு இலங்கை மக்களின் மனதிலிருந்தும் விலகிவிட்டார் என்பது அதைவிட உண்மை. இலங்கைக்குழுவினர் சார்பாக சுசந்திகா கொடியேந்திச் சென்ற காட்சி என்னமோ நன்றாகத்தான் இருந்தாலும் கூட, அந்தக் குழுவில் களத்தில் இறங்கத்தயாராக இருக்கும் - வெற்றி தோல்விக்கப்பால் - யாராவது ஒருவர் ஏந்திச் சென்றிருந்தால் கௌரவமாக இருந்திருக்குமென்று மனதில்பட்டது.

- ஜோசப் கிருஷ்ணா.


## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. ஆசியக்கிண்ண உதைபந்தாட்ட சம்பியன் யார்?
02. ICC சம்பியன்ஸ் றொபி அடுத்த மாதம் எங்கே நடைபெறவுள்ளது?
03. ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆட்டத்தொடர் நாயகன் யார்?

விளையாட்டுப் புதிர் 18

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:..............................................

முகவரி:..................................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 24.08.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

விளையாட்டுப் புதிர்-இல 18
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அனுசரணை:
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# லிட்டில் டைனமோ

ஒலிம்பிக் போட்டிகளில் எதை எடுப்பது எதை விடுவது என்று எல்லோருமே திக்கு முக்காடிக் கொண்டிருக்கிறகாலம் இது. எல்லாமே வீரம். சாதனை, துல்லியம், பெருமை.... இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

ஹலில் முட்லு என்று ஒரு துருக்கியர். நான்கு அடி பதினொரு அங்குலங்கள் மட்டுமே உயரமானவர். ஒலிம்பிக் பளுதூக்கும் போட்டியில் 56 Kg பிரிவில் மொத்தம் 295 Kg பாரம் தூக்கித் தங்கம் வென்றார். அதுவும் மூன்று முறை 1996 ஆம் ஆண்டில் அட்லாண்டாவில், 2000 ஆம் ஆண்டில் சிட்னியில், 2004 ஆம் ஆண்டில் ஏதென்ஸில் என்று வென்று தள்ளியிருக்கிறார். ஏதென்ஸில் உலக சாதனை படைத்துள்ளார். இது மட்டுமல்ல உலகசம்பியன்ஷிப் போட்டிகளில் பதினைந்து முறை பதக்கங்கள் வென்றவர். இயல்பாக எல்லா விளையாட்டு வீரருக்கும் ஏற்படும் உபாதைகள் இவருக்கும் ஏற்படவே செய்தன. இதில் விசேடம் என்னவெனில் அமெரிக்கா செல்ல மறுத்துவிட்டு துருக்கி நாட்டிலேயே வைத்தியம் செய்து கொள்வேன் என்று பிடிவாத மாக இருந்து நோயை வென்றவர். இவரது தனிப்பட்ட சோகங்களின் வடிகாலாக பளுதூக்கலை மாற்றிக் கொண்டார் போல இருக்கிறது.



ஹலில் முட்லு
காரம் நிறைந்த கடுகு

இவரது சகோதரர் புற்று நோயால் மரணமானார். இவர் தளர்ந்து போய் விடவில்லை. பெரும் அதிர்ச்சி சகோதரனின் மனைவியும் புற்று நோய்க்குப் பலியானார். அதனையும் சகித்துக் கொண்டார். எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு இலக்கில் வெற்றி பெற்றுள்ளார் இவர். இவரது இலக்கு முடிவடைந்து விடவில்லை. முப்பத்தொரு வயதாகும் இவரது அடுத்த இலக்கு 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டிதான்.

- பிரியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னிப் பதிவுகள்

## ஆக்கப்பொருள் கண்காட்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வருகின்ற முன்பள்ளிகளின் ஆக்கப் பொருள் கண்காட்சி, பிரதேச ரீதியாக கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

இதில் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதி முன்பள்ளிகளின் ஆக்கப் பொருள் கண்காட்சி எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (9)

## மாயவனூர் பெருமாள் கோவில் உற்சவம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

செம்ரெம்பர் 5 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 6 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தஉற்சவமும் நடைபெறும்.

தினமும் பகல் திருவிழாக்கள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி, பகல் 12 மணிக்கு நிறைவுறும். மாலைத் திருவிழாக்கள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி, இரவு 8 மணிக்கு நிறைவுறும். கொடியேற்றம், தேர், தீர்த்த உற்சவங்கள் அதிகாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். (9)

## பூநகரி செபஸ்தியார் கோவில் திருநாள் திருப்பலி

(பூநகரி)

பூநகரி மண்ணித்தலை செபஸ்தியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், தொடர்ந்து புனித செபஸ்தியாரின் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது. இந்த திருவிழா பாசையூர் மக்களால் கொண்டாடப்படவுள்ளது. (64)

— அழிக்கப்பட்ட எமது கிராமங்களை —

# மீளக் கட்டியெழுப்புவதற்கு வசதி படைத்தோர் முன்வரவேண்டும்

## தாயகன் தெரிவிப்பு

இந்திய இராணுவம் எமது நாட்டை விட்டு 1990 ஆம் ஆண்டு முற்றாக வெளியேறிய பின், மூன்று மாதம் மட்டுமே எம்மால் சமாதானக் காற்றைச் சுவாசிக்க முடிந்தது. அதன் பின்னர் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஆனையிறவு நோக்கிய கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி இராணுவ தரையிறக்கம் தொடர்ந்து நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்தப் பிரதேச மக்கள் முற்றாக இடம்பெயர்ந்தனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின், மீண்டும் எமது கிராமங்களுக்குத் திரும்பிய நாம்-முற்றாக அழிக்கப்பட்ட வீடுகள் பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்களைக் காணமுடிந்தது.

இவையெல்லாவற்றையும் அரசாங்கம் அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் அமைத்துத் தரும் என எண்ணி இருக்காது. இந்தப் பிரதேசத்திலுள்ள பணம் படைத்தவர்கள், வெளிநாடுகளிலுள்ள எமது உறவுகள் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர், பாடசாலைகள் நூல் நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் ஆலயங்களை அமைத்துத் தர முன்வர வேண்டும் என முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் து.கி.தாயகன் தெரிவித்தார்.

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலய அதிபர் பி.நவநீதமணி தலைமையில் நடைபெற்ற மாவீரர் கடற்புலி மேஜர் இன்பநிலா ஞாபகார்த்த வித்தியாலய விளையாட்டு மைதான பெயர்ப்பலகை திரைநீக்கவிழாவிலும், மைதான திறப்பு விழாவிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட து.கி.தாயகன் தொடர்ந்து உரையாற்றுகையில்-

மணல் விளையாட்டு மைதானங்களில் பயிற்சி பெற்று மாவட்ட, மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி எமது பிரதேச மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கடற்புலி மேஜர் இன்பநிலா ஞாபகார்த்த வித்தியாலய விளையாட்டு மைதானத்தை, நான்கு லட்சம் ரூபா செலவில் அவரின் உறவுகள் அமைத்துக் கொடுத்துள்ளனர். இப்படியான மைதானத்தில் மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதன்மூலம், வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளிலும் சாதனை படைக்கமுடியும் எனவும் குறிப்பிட்டார்.

இந்த விழாவில் மங்கள விளக்கை வடமராட்சிக் கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.எஸ்.தியாகராசா, மருதங்கேணி மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரி எஸ்.சண்முகதாஸ் ஆகியோர் ஏற்றினர்.

ஈகைச்சுடரை மாவீரரின் மைத்துனி ஸ்ரீ.சாந்தகுமாரி ஏற்றினார். சகோதரன் சண்முகராசா, மாவீரரின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தார். தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் மக்கள் தொடர்பாளர் கவிக் குயில் ஏற்றிவைத்தார்.

வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை வித்தியாலய விளையாட்டு மைதானப் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். மாவீரரின் சகோதரன் ம.ஸ்ரீதர்மராசா வித்தியாலய விளையாட்டு மைதானத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (21)

# பூநகரி மகாவித்தியாலயம் 32 லட்சம் செலவில் புனரமைப்பு

கிளிநொச்சி - பூநகரி மகாவித்தியாலயத்தில் 32 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. படை ஆக்கிரமிப்பில் இருந்து பூநகரி மீட்கப்பட்டதன் பின்னர், மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில் இந்தப்பாடசாலை புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை கடந்தகாலப் போரின் போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த 19 ஆயிரத்து 739 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து உள்ளன.

இதேவேளை படையினரின் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் முல்லைத்தீவு நகர் விடுவிக்கபபட்டதன் பின்னர் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இதுவரையில் முல்லைதீவில் 19 ஆயிரத்து 739 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாக புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

# முறிகண்டி - வன்னேரிக்குளம் வீதி புனரமைப்பு அரைகுறை நிலையில்

முறிகண்டி - வன்னேரிக்குளம் வீதி புனரமைப்பு அரைகுறை நிலையிலுள்ளது.

இந்த வீதியானது முறிகண்டியிலிருந்து அக்கராயன் வைத்தியசாலை வரையான 7 மைல் தூரம், கிரவல் போட்டு செப்பனிடப்பட்ட நிலையிலுள்ளது. அக்கராயன் வைத்தியசாலையிலிருந்து ஆனைவிழுந்தான் சந்தி வரையான 3 மைல்தூர வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. ஆனைவிழுந்தான் சந்தியிலிருந்து வன்னேரிக்குளம் வரையான 3 மைல்தூர வீதியும் கிரவல்மூலம் செப்பனிடப்பட்டது.

இதனால் செப்பனிடப்படாமல் உள்ள வீதியால் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை நேரடியாக அவதானிக்க முடிகிறது.

## துணைப்படை வீரர் நீரில் மூழ்கி சாவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியில் துணைப்படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் நேற்றுமுன்தினம் நீரில் மூழ்கி சாவடைந்துள்ளார்.

லெப்.பிரித்ராசா பிலிப்பையா என்றழைக்கப்படும் கள்ளப்பாடு, முல்லைத்தீவைச் சேர்ந்த இவருக்கு, தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் பகுதிக்கு நிரந்தர கிராம அலுவலர்கள் இல்லை

(வன்னேரி)

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய பகுதிகள் நிரந்தர கிராம அலுவலர்கள் இல்லாத நிலையில் இயங்குகின்றது.

இந்த இடங்களுக்கு கடந்த சில வருடங்களாக தற்காலிக கிராம அலுவலர்களே கடமையாற்றி வந்தனர். வன்னேரிக்குளம் கிராமத்துக்கு - அக்கராயன் கிராம அலுவலரும், ஆனைவிழுந்தான் கிராமத்துக்கு - ஸ்கந்தபுரம் கிராம அலுவலரும் தற்போது கடமையாற்றி வருகின்றார்கள்.

இவர்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டும் இந்தக் கிராமங்களுக்கு வந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். சில நேரங்களில் வாரநாட்களில்கூட இவர்கள் சமூகம் கொடுப்பதில்லை. இதனால் அந்தப் பகுதி கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரியவருகிறது. இது தொடர்பில் நிரந்தரமான கிராம அலுவலர்களை நியமிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும், இதுவரை எதுவித பயனும் கிட்டவில்லையென அறியமுடிகின்றது.

# வட்டக்கச்சி பகுதியில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

வட்டக்கச்சி காவல்துறையினரால் வட்டக்கச்சி காவல் பணிமனை நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் இருவேறு சம்பவங்களின் போது விற்பனைக்கு தயார் நிலையில் இருந்த 6 லீற்றர் கசிப்பு, சீனி 60 கிலோ, 4 கிலோ ஈஸ்ட் என்பவற்றுடன் சந்தேக நபர்களிடம் இருந்து இரண்டு துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றையும் வட்டக்கச்சி காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ந்தும் இவர்கள் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ர)

# நெடுங்கேணி பிரதேச செயலகம் விரைவில் திறக்கப்படவுள்ளது

(நெடுங்கேணி)

வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு திட்டநிதி உதவியுடன் மிகவும் துரிதமாக கட்டப்பட்டு வரும் நெடுங்கேணி பிரதேச செயலகம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தம் காரணமாக நெடுங்கேணி பிரதேச சபை பலத்த சேதமடைந்தது. இதன் காரணத்தினால் மேற்படி செயலகம் ஓர் சிறிய கட்டடம் ஒன்றில் இயங்கி வந்தது. இந்த பிரதேச சபை தற்போது வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு திட்ட நிதியுடன் புனரமைக்கப்பட்டு மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதேவேளை வன்னி பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலை கிணற்றில் நீர் வற்றிச் செல்கின்றமையினால் நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என தெரியவருகின்றது.

# வட்டக்கச்சி மாதிரிப் பண்ணையில் மாபெரும் விவசாயக் கண்காட்சி

எதிர்வரும் முதலாம் திகதி முதல் நான்காம் திகதிவரை ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை வட்டக்கச்சியில் மாபெரும் விவசாயக் கண்காட்சி ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தித் திணைக்களம், யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம் என்பவற்றின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

போரின் பிடியில் அகப்பட்டு மீளப் புத்துயிர் பெற்றுவரும் மக்களின் விவசாய அறிவைப் பெருக்குவதற்கும், புதிய தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கும், விருத்தி செய்வதற்குமாக இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சி அனைத்து சமூக மட்டங்களுக்குமாக குறிப்பாக - பாடசாலை மாணவர்களுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கண்காட்சியின் பூரண தகவல்களை அளிப்பதற்கு ஆக்கங்கள் செய்கை முறையிலும், ஒளிப்பட புகைப்படக் காட்சிகளாகவும், திட்ட விளக்கவுரைகளாவும் தயாராக உள்ளன.

இந்தக் கண்காட்சி மக்கள் மத்தியிலே பூமியின் பசுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, எம்மால் முடிந்தளவுக்கு நமது சமூகத்தை பசுமை நிறைந்த ஆரோக்கியப் பாதையில் இட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்துடன் எமது பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் விவசாய வளத்தினூடாக பல்வேறு உச்சப் பயன்பாட்டையும், இந்த வளங்களைப் பேணிப் பாதுகாப்பது பற்றியும் பூரண விளக்கங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த நோக்கங்களை நிறைவேற்றும் முகமாக பயிர் வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு அவற்றின் முகாமைத்துவம், நோய்க்கட்டுப்பாடு விதைத்தெரிவு, விதைஉற்பத்தி போன்ற பல பகுதிகள் காட்சிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

விவசாயப் பெருமக்களுக்கு உதவும் பொருட்டு- ஆர்வமுள்ளவர்கள், சிறந்த உற்பத்தியாளர்கள், புதிய தொழில்நுட்பக் கருவி உற்பத்தியாளர்கள் தங்களிடமுள்ள விவசாய உற்பத்திகள், கால்நடை உற்பத்திகள், போன்றவற்றை காட்சிக்கு உட்படுத்தும் அதேவேளை விற்பனைக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்தக் கண்காட்சியில் பங்குபற்றுவதன் மூலம் மக்களே உங்கள் விவசாய வாழ்வில் ஏற்படும் சந்தேகங்கள், பிரச்சினைகள் தொடர்பான [illegible] கொள்ளுமாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.



நீண்டகால புனரமைக்கப்படாமல் இருக்கும் புதுக்குடியிருப்பு- ஆனந்தபுரக் கிராமம்

படம்: ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக*
*நினைப்பானை நீங்கும் திரு*
திருக்குறள்

# நமது நோக்கு

## அரசும், அனுசரணையாளர்களும், சமாதானமும்...

திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை அமைத்துள்ளதாகவும், அது தொடர்பான விபரங்களை அறிக்கையாகத் தருமாறு தாங்கள் கோரியிருந்தபோதும் அதற்கான விளக்கம் அளிக்கத் தவறிவிட்டதற்காகவும்...

முல்லைத்தீவு கடலில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலை சோதனையிட நடவடிக்கை எடுக்காததற்காகவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீது தேசிய பாதுகாப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளதுடன் - இதனை சர்வதேச கவனத்திற்குக் கொண்டுசெல்லப் போவதாகவும் அச்சுறுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் புதிதாகத் தோன்றியுள்ளதாகவும், இது துறைமுகத்தின் பாதுகாப்புக்கு மட்டுமல்ல அதனை அண்டியுள்ள பகுதியில் இந்தியா குத்தகைக்கு எடுத்துள்ள எரிபொருள் சேமிப்புக் களஞ்சியங்களின் பாதுகாப்புக்கும்கூட அச்சுறுத்தலாக எதிர்காலத்தில் இருக்கப்போகின்றது என்றும்கூட இலங்கை ஜனாதிபதி கடந்த தேர்தலுக்கு சில மாதங்களின் முன்னர் இந்திய அரசுக்கும் அறிவித்திருந்தமை நினைவிருக்கலாம்.

அப்போதுதான் குரங்குபாஞ்சான் விடுதலைப் புலிகளின் முகாம் தொடர்பான பிரச்சினையும் பெரிதாகப் பேசப்பட்டது. அதனை இந்தியாவுக்கு கோள்மூட்டும் திருப்பணியை சிரமேற்கொண்டு டெல்கிக்கு காவடி எடுத்தவர் தற்போதைய வெளியுறவு அமைச்சரும் அப்போதைய ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர்தான்.

அந்தச் சமயத்தில் சமாதானப் பேச்சுக்கள் ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்திருந்தது. அதனை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தி சிக்கலுக்குள் உட்படுத்தும் நோக்குடன்தான் கதிர்காமர் இந்தியாவுக்கான தனது விஜயத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளின் முகாம்கள் குறித்த புனைகதை அவிழ்த்து விட்டிருந்தார். இந்தியாவை எப்படியாவது இந்த விவகாரத்துள் இழுத்துவிட்டு - புலிகளுக்கு எதிராக அதனை சினம் ஏற்றி விடுவதே அவரது இலக்காகவும் இருந்தது. ஆனால், டெல்கிக்கு கதிர்காமரையும் தெரியும் ஜனாதிபதி சந்திரிகாவையும் நன்கு தெரியும் என்பதால் கதிர்காமர் விரித்த பொறிக்குள் அது விழவேயில்லை.

- குரங்குபாஞ்சான் விவகாரமும் பிசுபிசுத்துப்போன ஒன்றாயிற்று.

- ஜனாதிபதி தலைமையிலான ஐ.ம.சு. முன்னணி தேர்தலில் வென்று ஆட்சியை அமைத்ததும் மீண்டும் சமாதானத்தை முன்னெடுக்கச் சொல்லும் சர்வதேச அழுத்தமானது அதிகமாகவே ஐ.தே.முன்னணி அரசு காலத்தில் சமாதானத்தை குழப்ப மேற்கொண்ட எந்தப் பிரசாரத்தையும், கையாண்ட எந்த யுக்தியையும், புதிய அரசால்... அதாவது ஜனாதிபதியால் உடனடியாக மேற்கொள்ள முடியாது போயிற்று.

எந்த நோர்வேயின் அனுசரணையை எதிர்த்தார்களோ, மத்தியஸ்த முயற்சியை மறுதலித்து அவமதித்தார்களோ, கண்டித்தார்களோ அவர்களையே மீளவும் சமாதானம் பேச அழைக்க வேண்டிய நிலை புதிய அரசுக்கும், ஜனாதிபதிக்கும் ஏற்பட்டது வரலாற்றுப் பதிவாகவே ஆகிவிட்டது.

இந்த அழைப்பு உண்மையில் சமாதானம் மீதான பற்றார்வத்தினால் ஏற்பட்ட ஒன்றல்ல என்பதை இப்போது நோர்வே அரசும், ஏனைய சர்வதேச சமாதான ஆதரவுச் சக்திகளும் உணரத்தொடங்கிவிட்டன.

சமாதானத்தின் பெயரில், அது பற்றி வெறுமனே பேசிக்கொண்டு, மெல்லமெல்ல சர்வதேச நிதி வழங்கும் நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையே கவனத்திற்கொண்டு இலங்கை அரசு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்துப் பேசிக்கொண்டே காலத்தைக் கடத்துகிறது என்பது இன்று தெள்ளத் தெளிவாகிவிட்ட விடயமாகும்.

சமாதானத்திற்கான யுத்தம் செய்வதை இலக்காகக் கொண்டு ஏழாண்டு காலம் ஆட்சி நடத்திய ஒரு ஜனாதிபதி அவ்வளவு இலகுவில் சமாதானத்திற்கு, பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார் என எவராலும் நம்பவே முடியாது.

தான் சமாதானத்தின் மீது ஆழ்ந்த அக்கறையுடன் இருப்பதாகக் காட்டிக்கொண்டு அதற்கு எதிரான - அதனைக் குழப்பும் தன்மையிலான நடவடிக்கைகளை பன்முகப்பட்ட வழிகளில் மேற்கொண்டும் வரும் ஜனாதிபதியின் நூலோபாயங்கள் அனைத்துலக சமூகத்தையும் ஏமாளிகளாக்கும் தன்மை கொண்டவையேயாகும்.

கதிர்காமர் மூலம் விடுதலைப் புலிகளுக்கும், சமாதான முயற்சிகளுக்கும் எதிரான எரிச்சலூட்டும் பொய்மைகளை மட்டுமே கொண்டதான பிரசார நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடும் ஜனாதிபதி - இராணுவத்தினரையும், கடற்படை மற்றும் விசேட அதிரடிப்படை போன்றோரையும் சிறப்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினரையும் ரகசியமான உத்தரவின் அடிப்படையில் ஏவிவிட்டு மேற்கொண்டும் வருகிறார்.

இந்த நடவடிக்கைகள் யாவும் விடுதலைப் புலிகளுக்கு கோபத்தையும், நோர்வே அரசுக்கு நெருக்கடிகளையும் ஏற்படுத்தவே செய்யும் என்பதில் ஐயமில்லை.

முல்லைத்தீவு, சாலை கடற்பரப்பில் ஆயுதமிறக்கல் சம்பவம் குறித்த கடற்படையினரின் புகார் கண்காணிப்புக்குழுவை நெருக்கடிகளுக்குள்ளாக்கும் உள்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையேயாகும்.

அதேபோன்று, கிழக்கின் படுகொலைகளுக்கும், தொடரும் அவலங்களுக்கும் மூலகாரணம் கருணா கும்பலைச் சேர்ந்தவர்களும் அவர்களை நெறிப்படுத்திவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும்தான் என்பதை அண்மைக்கால சம்பவங்கள் யாவும் ஆதாரபூர்வமாக நிரூபித்துவரும் நிலையில், பாதுகாப்பு செயலர் அதற்கு கண்காணிப்புக் குழுவினரை கண்டித்திருப்பதானது, அக்குழுவின் செயற்பாட்டுத் திறனை அவமதிப்பதாகவே உள்ளது.

இது தமது பணிக்கு அப்பாற்பட்ட ஒன்றெனவும் அதனை கவனிக்கவேண்டியது பாதுகாப்புத்துறைதான் எனவும் கண்காணிப்புக்குழு தெளிவுபடுத்தியுள்ளது. எனினும் நோர்வே பொறுமையின் எல்லைக்கு வந்து 'நீங்கள் விரும்பாவிடில் சமாதான அனுசரணைப் பணியிலிருந்து விலகிக்கொள்கின்றோம்' என தெரிவித்துள்ளமையானது ஜனாதிபதியும் அரசும் எதனை விரும்புகிறது என நன்கு அறிந்து கூறப்பட்ட வார்த்தைகளேயாகும்.

ஆம். ஜனாதிபதியோ, அரசோ சமாதானத்தையும், நோர்வே அரசின் அனுசரணையையும் விரும்பவில்லை என்பதை நோர்வே உணரத் தொடங்கிவிட்டது.

## நாடும் நடப்பும்




# சங்கரத்தை, துணைவிப் பகுதிகளில் சட்டவிரோத மின் இணைப்புக்கள்

(சங்கரத்தை)

சங்கரத்தை - துணைவிப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோர் அதிகரித்துக் காணப்படுகின்றனர். இந்தச் சுற்றாடலில் உள்ள 30 வீடுகளுக்கு மேல் இரவு மட்டுமன்றிப் பகலிலும் இவ்வாறான முறையில் மின்சாரத்தைப்பெற்று பாவனை செய்து வருகின்றனர். சில இடங்களில் வீதி மின்கம்பங்களில் இருந்தும், சிலர் இரண்டு மூன்று வீடுகளுக்குத் தொடர்ச்சியாகவும், இன்னும் சிலர் நிரந்தரமாக நிலத்துக்குக் கீழ் குழாய்களைத் தாழ்த்தி அதனூடாக மின் வயர்களை இணைத்தும், பல வழிகளிலும் மின்சார இணைப்புப்பெற்று வருகின்றனர்.

இதனால் எத்தனையோ உயிரிழப்புக்களைச் சந்தித்தும் அது பற்றி எதுவித கவலையும் இல்லாமல் தமது இந்தச் செயலைத் தொடர்ந்தவண்ணமுள்ளனர். இதுபற்றி மின்சார சபை அதிகாரிகளிடம் பொதுமக்கள் புகார் செய்து. அவர்கள் வந்து மின் இணைப்பைத் துண்டித்து எச்சரிக்கை செய்தாலும், மீண்டும் இவ்வாறாக மின்சாரத்தைப்பெற்று வருகின்றனர்.

இதனால் அடிக்கடி மின் இணைப்பு விநியோகம் துண்டிக்கப் படுவதால், நிரந்தர மின் இணைப்புப்பெற்றோர் பெரும்பாதிப் படைகின்றனர். (48)

# யு.என்.எச்.சி.ஆரின் உதவியுடன் புனித நகரில் வீட்டுத் திட்டம்

வடமராட்சிக் கிழக்கு - நாகர்கோயிலிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு பருத்தித்துறையில் நிரந்தர வீடு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பருத்தித்துறை கற்கோவளத்தின் கரையோரக் கிராமமான புனித நகர்ப்பகுதியில் இந்த நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு 85 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கு, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இந்த வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ள பகுதிகளுக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

நாகர்கோயிலிலிருந்து இடம்பெயர்ந்து அதன் அயல் கிராமங்களான அம்பன், குடத்தனையில் வசிக்கும் குடும்பங்களுக்கும் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

1999 ஆம் ஆண்டுமுதல் நாகர்கோயில் பகுதியில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டு, அதியுயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளதால், அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் போதிய அடிப்படை வசதிகள் ஏதுமின்றி பருத்தித்துறை லூர்துமாதா தேவாலயப் பகுதியில் தனியார் காணிகளில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

# கடற்தொழிலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை

யமஹா வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதலும், பராமரித்தலும் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை ஒன்றை வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் யமஹா மோட்டார் கம்பனியினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இந்தப் பயிற்சிப்பட்டறை இம்மாதம் 24ஆம் திகதி தொடக்கம் 5 நாட்கள் யாழ். பீச் இன் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறைக்கான நிதி உதவிகளை ஜப்பானிய யமஹா மோட்டார் கம்பனியும், ஜப்பானிய வெளிநாட்டு புலமைப்பரிசில் கழகமும் இணைந்து வழங்கவுள்ளன.

இந்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க ஜப்பானிய ஸ்தானிகர் அக்கியோ சூடா, கொழும்பு யமஹா மோட்டார் கம்பனி பொதுமுகாமையாளர் றஞ்சன் டீ சில்வா ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்ளும் 20 கடற்தொழிலாளர்களுக்கும் தங்குமிடவசதி, உணவு வசதிகள் இலவசமாக செய்து கொடுக்கப்படவிருப்பதுடன், பயிற்சியின் போது வெளியிணைப்பு இயந்திர உதிரிப்பாகங்கள், திருத்துவதற்குரிய ஆயுதங்களும் இலவசமாக வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (21)

# மடு உற்சவத்துக்கு சென்றவர் நகைகளைப் பறிகொடுத்தார்

மடுமாதா தேவாலய திருநாளுக்குச்சென்ற பருத்தித்துறை வாசி லட்சக்கணக்கான பெறுமதியுடைய நகைகளைப் பறிகொடுத்தபின் வெறுங்கையுடன் வீடு திரும்பினார்.

இந்தச் சம்பவம் கடந்த 14ஆம் திகதி மடுமாதா தேவாலயத்தில் நடைபெற்றது. பருத்தித்துறை 3ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த இரத்தினம் தர்சினி என்ற இளம் குடும்பப்பெண்ணே சுமார் 4 லட்சம் பெறுமதியுடைய தங்க நகைகளைப் பறிகொடுத்தவராவார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் [illegible] உட்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (122)

# பளை கல்விக் கோட்டத்தில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

பளைக்கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலைமை காரணமாக மாணவர்களின் கல்வி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

பளை மத்திய கல்லூரியில் அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளில், ஆங்கிலத்தில் பலர் சித்திபெறாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

மேலும் இந்தக் கல்விக் கோட்டத்தில் கட்டட வசதியின்மையால் பல பாடசாலைகளில் மாணவர்கள் மர நிழலகளின் கீழ் இருந்தே கல்வி கற்றுவருகின்றனர்.

குறிப்பாக மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கட்டட வசதிகள் இல்லாமையினால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (122)

# உலருணவு நிவாரணம் வழங்கப்படாமையால் நெடுந்தீவில் மீளக்குடியமர்ந்தோர் அசௌகரியம்

இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்து கடந்த சில மாதகாலமாக நெடுந்தீவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாராணப் பொருட்கள் வழங்கப்படாமையினால், இந்தக் குடும்பங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சட்ட விரோதமாக படகுகள் மூலமும், அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடனும் மீளக்குடியமரும் இந்தக் குடும்பங்கள் தமது நாளாந்த உணவுத் தேவைகளுக்கு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருவதுடன், தங்கள் உறவினர்களையே நம்பி வாழ்கின்றனர்.

தற்போது நெடுந்தீவில் 2004ஆம் ஆண்டு மாசி மாத நிவாரணம் வழங்கப்பட்டு, பங்குனி மாத நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதனால், இந்தக் காலப்பகுதிக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்தவர்களது பெயர்களை இந்தப் பட்டியலில் சேர்க்க முடியாத நிலை உள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இந்தக்குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களற்ற ஏனைய பாவனைப் பொருட்கள் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு, வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்குத் திசையிலிருந்து... இந்திரஜித்

# ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் நாட்டுக்குப் பயன்படுதல் வேண்டும்

இலங்கையில் நாளாந்தம் நடைபெறும் நிகழ்வுகள் யாவும், நாட்டில் சமாதானம் ஏற்படுமா? அந்த சமாதானம் ஏற்பட வேண்டுமானால், நாட்டு மக்கள் எந்தளவு தியாகத்தைச் செய்யவேண்டும்? என்ற கேள்விகளை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளன.

மக்களைப் பொறுத்த வரையில், அவர்கள் சமாதானத்துக்காகத் தியாகம் செய்யவேண்டிய கட்டாயம் பட்ட வேளைகளில் ஏற்றுக்கொள்கின்றன.

இன்று நாளாந்தம் நடைபெறும் நிகழ்வுகளை அவதானிககின்றபோது, அரசாங்கமானது முன்னர் உறுதியளித்த தியாகம் மிக்க இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதை ஒருபோதும் ஏற்படுத்தித்தராது என்றே எண்ணத்தோன்றுகிறது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை



தமது கட்சி செய்யவில்லை எனத் தெரிவித்தார். இது ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாதகமாக அமையாத போதும், அரசாங்கப் பங்காளியான ஜே.வி.பியின் விடயத்தில் ஜனாதிபதி அவதானமாகவே இருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டியுள்ளது.

நாடு இன்று சமாதானத்தைத் தூரத்தில் வைத்துப் பார்த்துக் கொண்டு நாட்டின் அபிவிருத்தியையோ அல்லது அரசியல் காய் நகர்த்தல்களையோ மேற்கொள்கின்ற அளவுக்கு அவகாசத்தைக் கொண்டிருக்கவில்லை. உடனடியாக சமாதானத்தை ஏற்படுத்தினால் மாத்திரமே நாட்டின் அரசியல் வாழ்வில் இணைந்திருக்கலாம் என்ற உண்மை அனைவருக்கும் புரிந்துள்ளது.

ஆனால், ஜே.வி.பியைப் பொறுத்த வரையில் அதற்கான அவசியம் தற்போதைக்கு இல்லை. அதன் நோக்கமெல்லாம் - சிங்கள மக்களை தம் வசப்படுத்தி, நகர்வுகளை மேற்கொண்டு அதன் வழியில் அடுத்த

கிறார் எனப் பார்ப்போம். சமாதான முனைப்பின் கீழ் ஜே.வி.பியையும் எதிர்த்து நின்று, தீர்வு ஒன்றை ஏற்படுத்த ஜனாதிபதி தயார். ஆனால், நடைமுறை அரசியலை மையப்படுத்தி, சமாதானத்தைக் கொண்டுசெல்ல வேண்டியுள்ளமையால், அவர் பாரிய சிக்கலுக்குள் தத்தளிக்க வேண்டியுளளது.

இதற்கு அப்பால் பிந்தியநிலை சமாதான நகர்வின்படி - ஜனாதிபதி ஜே.விபியின் ஆதரவு தமக்குக் கிடைக்கும் என்பதில் முழுமை நம்பிக்கையை இழந்துள்ளார்.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால கோரிக்கையின் அடிப்படையில் பேசுவதற்கு முன்வந்துள்ளார். எனினும், அவர் 2000 ஆம் ஆண்டின் தீர்வுப்பொதியை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கத்தின் சார்பில் இடைக்கால யோசனையை முன்வைக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

இதனை தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த்துள்ளமையால், பேசசுவார்த்தைகளை ஆரம்பித்த பின்னர் அரசாங்கத்தின் யோசனையை பேச்சுவார்த்தை மேசையில் முன்வைக்கலாம் என அரசாங்கத்தின் தரப்பில் யோசனையைத் தயாரித்து வரும் வெளிநாட்டமைச்சர் கதிர்காமரும், சமாதான செயலகர் ஜயந்த தனபாலவும் ஜனாதிபதிக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

அந்த ஆலோசனையின் அடிப்படையில் விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவே அரசாங்க தரப்பு ஏற்பாடுகளை செய்து வருகிறது. இதில், ஜே.வி.பியின் எதிர்ப்பு என்ற

விடயத்தை சமாளிக்கும் பொறுப்பை, ஜனாதிபதி அமைச்சர்களான மங்கள சமரவீரவுக்கும், அநுர பண்டாரநாயக்கவுக்கும் ஒப்படைத்துள்ளார். மறுபுறத்தில் - ஜே.வி.பி இடைக்கால நிர்வாகத்துக்கு எதிராக நடத்திவரும் எதிர்ப்புக் கூட்டங்கள், மக்கள் அலையை அவர்கள் பக்கம் திருப்பும் விதம் குறைந்து வருவதாக தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

நாட்டில் பொருட்களின் விலை உயர்வுகள் பாரிய வீதத்தில் கூடிக் கொண்டிருக்கும் நிலையில், ஜே.வி.பியின் எதிர்ப்புக் கூட்டங்களுக்கு மக்களின் அலை குறைந்து வருகிறது. இன்று சமாதானம் ஏற்பாட்டால் தான் வெளிநாட்டு உதவி கிடைக்கும் என்ற நிலை விகாரமாக மாற்றம் அடைந்து, சமாதான ஏற்பாட்டால் தான் பொருட்களின் பாரிய விலையுயர்வைத் தடுக்க முடியும் என்ற கருத்து உரத்துக் கூறப்படுகிறது.

எனவே, மக்களின் அன்றாட வாழ்க்கையா முக்கியம் அல்லது இடைக்கால நிர்வாகத்துக்கு எதிரான போராட்டமா முக்கியம் என்பது தொடர்பாக அரசாங்கத்தின் பங்காளியான ஜே.வி.பி முடிவெடுக்க வேண்டிய கட்டாயம் தற்சமயம் ஏற்பட்டுள்ளது.

அதிலும் ஒரு படிமேலாகச் சென்று, ஜனாதிபதியும் தமது நிறைவேற்று அதிகாரத்தை அரசியல் காய்நகர்த்தலுக்கு அல்லாமல் நாட்டின் சுபீட்சத்துக்கு பயன்படுத்த வேண்டிய அத்தியாவசியம் எதிரில் தென்படுகிறது.

ஒன்றுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். யுத்தம் ஒன்று நாட்டை ஆக்கிரமித்திருந்தபோது, சிங்கள மக்கள் மத்தியிலும் எதைச் செய்தாவது சமாதானம் ஏற்படவேண்டும் என்ற ஆதங்கம் காணப்பட்டது. ஆனால், இன்று அதே சிங்கள மக்கள் மத்தியில் சமாதானம் என்ற விடயம் பூதாகரமான விடயமாக மாற்றப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையை சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றுள்ள அடிப்படைவாதக் கட்சிகள் - உரியமுறையில் இதுவரை செய்து முடித்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தம் ஒன்றில் ஈடுபட்டிருந்தபோது, அவர்கள் மீது சிங்கள மக்கள் மற்றும் சிங்களக் கட்சிக்காரர்களும் பயம் செறிந்த மரியாதையைக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், அந்தப் பயம் செறிந்த மரியாதையானது - இன்று சற்று மாற்றம் பெற்றுள்ளது. சமாதானத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்தி நிற்கிறார்கள். அவர்கள் மீண்டும் யத்தத்துக்குச் செல்ல மாட்டார்கள் என்ற அதீத நம்பிக்கை அவர்கள் மத்தியில் காணப்படுகிறது. எனவேதான், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 20 வருடகால யுத்த சூழ்நிலையை அந்த மககள் சரியாகப் புரிந்து கொள்வார்களானால், இவ்வாறான எண்ணங்களைக் கைவிட்டு விடுவர். தமிழீழ விடுதலைப் புலிகள் நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில், போராட்டங்களைக் கைவிடத் தயாரில்லை என்பது கடந்தகாலத்தின் அனுபவங்கள். இந்தியா - மாகாண சபைத் திட்டத்தை முன்கொண்டு வந்த போது, தமக்கு முன்னர் உதவிய நாடுதானே என்ற எண்ணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இது அவர்களின் போராட்ட உறுதிப்பாட்டை உணர்த்துகிறது. எடுத்த உறுதியான தமிழீழம் என்ற கொள்கையில் இருந்து இன்னமும் அவர்கள் விலகிச் செல்லத தயாரில்லை. ஏனெனில், இலங்கையில் பதவிக்கு வரும் எந்த அரசாங்கமும் எப்போதுமே தமிழீழ விடுதலைப புலிகள் - தமிழ் மக்கள் சார்பில் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதில்லை.

அதற்குப் பதிலாக அந்தக் கோரிககைகளை எந்தளவு தூரம் மேலும் குறைக்க முடியும் என்பதிலேயே அவை கவனம் செலுத்தி வந்துள்ளன. அதன் எதிர் பெறுபேற்றையே இன்று நாட்டு மக்கள் அனுபவிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏனைய: தமிழ் இயக்கங்கள்- அன்று இந்தியாவின் நேரடித் தலையீட்டிலான மாகாண சபைத்தீர்வை, தாம் கொண்டிருந்த தமிழீழ கொள்கைக்கு ஈடாக ஏற்றுக்கொண்டு, பொது வாழக்கையில் ஈடுபடத் தொடங்கின. ஆனால், அவை தமது முடிவு பிழையானது என்பதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், சில தனிப்

தமிழ் மக்களும், தமிழ்க் கட்சிக்காரர்களும் அதிகமாக விரும்பியமைக்குக் காரணம் - நாடாளுமன்றத்தின் மூலம் தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காது.

எனவே, ஜனாதிபதியானவர் தமது கோரிக்கைகளை நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு தீர்த்து வைப்பார் என்பதை அடிப்படையாகக் கொண்டாகும். ஆனால், நடைமுறையில் அனைத்துமே மாறுபட்ட கோணத்தில் இடம்பெறுவது தமிழர்களைப் பாதிக்கவே செய்துள்ளது என்பதை மறைக்கமுடியாது.

தமிழர் தரப்பின் பெரும்பான்மையானவர்கள் இன்று சமாதான நடைமுறையில் நம்பிக்கையற்றவர்களாக மாறியுள்ளனர். அரசாங்கமானது தமக்குள் இரட்டைக் கொள்கையைக் கைக்கொள்வதானது, தமிழ் மக்களை மாத்திரமல்ல, சிங்கள மக்களையும் சிந்திக்கச் செய்துள்ளது.

ஆனால், அந்தச் சிந்தனையை மாற்றிவிடும் பல மாற்று ஏற்பாடுகளை - சிங்கள இனவாதக் கட்சிகள் செய்து கொண்டிருக்கின்றன. அதில் முக்கியமானது ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகளாகும்.

மக்கள் விடுதலை முன்னணியானது இன்றுள்ள சந்தர்ப்பத்தை முழுமையாக தமது அரசியல் நிலைப்படுத்தலுக்குப் பயன்படுத்தி வருகிறது. எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பதைக் காட்டிலும், அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பதே தமது கட்சியின் வளர்ச்சிக்கு உதவும் என்பதை - மக்கள் விடுதலை முன்னணி இறுகப்பற்றிக் கொணடுள்ளது.

எனவே அதன் வழியில் தமது நகர்வுகளைச் சிறப்பான முறையில் அது செய்து வருகிறது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு ஜே.வி.பியின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. எனவே, அதனைப் பகைத்துக் கொண்டு ஆட்சியை நடத்த முடியாது என்பதை ஜனாதிபதி உணர்ந்திருந்தாலும், அந்தக் கட்சியைக் கொண்டு சமாதான முயற்சிகளை நகர்த்திச் செல்வதில் பாரிய இடைஞ்சலை ஏற்றுக்கொள்கிறார்.

இலங்கை அரசியலில் புதிய ஒரு வடிவம் - அண்மையில் ஜனாதிபதி ஆற்றிய உரை எனக் கூறலாம். இலங்கை சுதந்திரக் கட்சியின் புதிய கட்டட அமைப்பு ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி - தமது கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியபோதே, இலங்கை சுதந்திரக் கட்சிக்கு வரப்போகும் சவாலை உணர்ந்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், தமது பங்காளிக் கட்சியான ஜே.வி.பியையும், எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் ஒரே விதமான கொலைகாரக் கட்சிகள் என வர்ணித்திருந்தார். சிவப்புத் தொப்பி அணிந்தவர்களும், பச்சைத் தொப்பி அணிந்தவர்களும் செய்த கொலைகளைபோல

தேர்தல் ஒன்றில் பிரதான எதிர்க்கட்சியாக வரவேண்டும் என்பதுவே. அதற்காக முன்னரைக் காட்டிலும் தற்சமயம் ஜே.வி.பிக்கு நிறையவே வாய்ப்பு, வசதிகள் கிடைத்துள்ளன.

அதனை உரிய வகையில் அந்தக் கட்சியும் பயன்படுத்தி வருகிறது. தாம் ஜனாதிபதியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைத்தபோது, ஜே.வி.பி வழங்கிய உறுதிமொழிகள் முழுமையாக நிறைவேற்ற முடியாதவை என்பது அந்தக் கட்சிக்கும் நன்றாகவே தெரியும்.

எனவேதான் அரசாங்கக் கட்சியாகவே இருந்துகொண்டு, உள்ளக எதிர்க்கட்சியாக அது செயற்படுகிறது. அது நீண்ட காலத்துக்குக் கைகொடுக்காதபோதும் நீண்ட காலத்துக்கான முதலீட்டு அரசியலாக ஜே.வி.பிக்கு உதவி வருகிறது.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் ஜே.வி.பியின் பங்கு முக்கியமானது என்றபோதும், அதற்கான நிதியோட்டங்கள் தொடர்பில் அந்தக் கட்சி இலங்கை சுதந்திரக் கட்சியை லாவகமாக மாட்டிவிட்டுள்ளது.

ஜே.வி.பி எதனைச் செய்தாலும் அதற்கு நடைமுறைப்படுத்தும் பாரிய பொறுப்பை இலங்கை சுதந்திரக் கட்சியே பாரமேற்கவேண்டியுள்ளது. பட்டதாரிகளுக்கான ஒருவருட பயிற்சிக் காலத்துக்கான முழுமை நிதியளிப்பும், முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அபிவிருத்திக்காக ஒதுக்கி வைத்த நிதியைக் கொண்டே சமாளிக்கப்படுகிறது. இந்தப் பட்டதாரி நியமன விடயத்தின் பின்னால், தற்போதைய அரசாங்க ஊழியர்களின் தொழில் இழப்பும் அச்சுறுத்தலாக உள்ளது என்பதை மறுக்க முடியாது.

## பிந்திய அரசியல் நகர்வும், சமாதானமும்

நாட்டில் போர் ஒன்று முன்னெடுக்கப்படாது என்ற நம்பிக்கையில் தென்னிலங்கைக் கட்சிகள் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. அதில் ஒன்றுதான் ஏ-9 வீதியின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதிகளவான வருமானம் கிடைப்பதால், அந்த அமைப்பு மீண்டும் யுத்தத்துக்குச் செல்லாது என்ற நம்பிக்கை தென்னிலங்கைக் கட்சிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளமையாகும். தென்னிலங்கை கட்சிகளின் இந்த நம்பிக்கையானது, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் சாத்தியமானதல்ல என்பதே தமிழர் தரப்பின் எண்ணமாகும். போராட்டம் என்ற வடிவத்தின் கீழ் இவ்வாறான தற்காலிக வருமான எண்ணக்கருக்கள் - துச்சம் என்பதே தமிழர் தரப்பின் வாதமாகும். எனவே தொடர்ந்தும் அரசாங்கத் தரப்பு சமாதானம் என்ற போர்வையில் ஏமாற்றங்களைத் தந்துகொண்டிருக்குமானால், தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுமையைக் கடைப்பிடிப்பர் என்பதை எதிர்பார்க்கமுடியாது என தமிழர்கள் கருதுகின்றனர்.

இத்தகைய பின்னணியில் ஜனாதிபதி எவ்வாறான முன்னெடுப்பை மேற்கொள்

## ஒரு நிமிடம் சிந்திப்போம்

### பிறருக்காக நேரத்தை செலவழிப்பது ஆயுளை நீடிக்கும் செயலாகும்

வயது மூத்தவர்கள் மகிழ்வாக வாழ விரும்புகின்றார்கள். ஆனால், அந்த மகிழ்வை எப்படி பெறுவது. பணத்தினாலோ - நிறையப் பிள்ளைகளை பெற்று, வம்சம் பெரிது என்று இறுமாப்புக் கொள்வதினாலோ அல்ல. மாறாக பிறருடைய வாழ்க்கையை வளமாக்குவதற்கு தன்னை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதும் - பிறருக்காக நேரத்தையும், சக்தியையும், பலத்தையும் செலவழிப்பதும் மகிழ்வைக் கொடுக்கும். இதில் ஆத்ம திருப்தியையும் காணமுடியும்.

அநேகர் உத்தியோகம் பார்த்து ஓய்வுபெறுகின்றபோது, தமக்கு வயது சென்று விட்டது என்ற உணர்வும், இனி எம்மால் ஒன்றும் செய்ய முடியாது பிறரில் தங்கி வாழ வேண்டியதுதான், வீட்டில் சும்மா இருக்கும் சடப்பொருள் தான் என்று கருதுவதினால், பல சிக்கல்களை உருவாக்கிக் கொள்ளுகின்றார்கள்.

உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டால், தாம் முதுமை அடைந்துவிட்டோம் என்று நினைப்பதும், முதுமை அடைந்தால் நோய் வந்துவிடும், நோய் வந்தால் அதைப் போன்ற துன்பியல்பு வேறொன்றும் இல்லை. இத்தகைய மறையான சிந்தனைகள் - நோய் இல்லாதவரையும் நோயாளியாக மாற்றுகின்றது.

மூத்தவர்களோ - இளையவர்களோ மகிழ்வாக வாழ்வதற்கு நல்ல நண்பர்களும், அன்பான குடும்ப இணைப்புமே காரணமாக அமைகின்றன. எனினும், மூத்தவர்களுக்கு பிறரின் உதவி இருப்பது மிகவும் அவசியம் என்பதை மறுக்கமுடியாவிட்டாலும், அவர்களும் பிறருக்கு உதவுபவர்களாக இருக்கும்போதே, மிகவும் மகிழ்வாக இருக்க முடியும்.

இறப்பு என்பது இம்மண்ணில் பிறந்த அனைவருக்கும் உண்டு. ஆனால், அது ஆளுக்கு ஆள் வித்தியாசமான ஆயுளுடன் முடிவடைவதாக காணப்படும். எனினும், எல்லோரும் நீண்ட ஆயுளுடன் வாழவே விரும்புகின்றார்கள். இந்த விருப்பம் நிறைவேற வேண்டும் என்றால், மன அழுத்தம் அற்ற மகிழ்வு நிறை வாழ்வு வேண்டும். மகிழ்வை எப்படி ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்றால் பிறருக்கு உதவி வாழ்வதன் மூலமே ஆகும்.

"பிறருடைய வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பது - தங்களுடைய சொந்த ஆயுளை நீடிக்கும்" என்பதை வயது சென்ற 423 தம்பதியரை வைத்து நடத்தப்பட்ட நெடுநாளைய ஆராய்ச்சி சுட்டிக் காட்டியது. இந்த ஆரய்ச்சியை நடத்திய ஸ்டெ∴பனி பிரௌன் இவ்வாறு கூறுகிறார். "உறவுகளால் நமக்கு என்ன கிடைக்கிறது என்பது அல்ல. ஆனால், நாம் என்ன கொடுக்கிறோம் என்பதே மிகுந்த நன்மை தருகிறது என்பதை இந்தக் கண்டுபிடிப்புக்கள் தெரிவிக்கின்றன".

வீட்டில் உள்ள மூத்தவர்களை கொண்டு வேலை செய்விக்காது, அவர்களை ஒதுக்குவது நல்லதல்ல. அவர்களினால் முடிந்த வேலைகளை செய்ய அனுமதிக்கவேண்டும். வீடு கூட்ட, பிள்ளைகளுடன் விளையாட, கதைசொல்ல, சமைக்க, சமையலுக்கு உதவிபுரிய, பயணங்கள் மேற்கொள்ள இப்படியாகச் சிறுசிறு எடுபிடி வேலைகளை செய்விக்க வேண்டும். இதற்காக அதிக வேலைப் பழுவைக் கொடுத்து, அழுதத்தைக் கொடுப்பதும் பெரும் அபத்தமான செயலாகும்.

ஆகவே மூத்தவர்கள் ஒரே இடத்தில் தனிமையில் இருந்து, மனதை குடையும் சிந்தனைப் போக்கில் இருக்காது - பிள்ளைகளுக்கு, அயலவர்களுக்கு தம்மால் முடிந்த உதவிகளைச் செய்தல் நல்லது. அத்துடன், சமூகப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதும், தமது நண்பர்களுடனும், உறவுகளுடனும் உரையாடுவதும் சிறந்தது. இவையெல்லாமே சேர்ந்து நன்மை பயக்கும்.


எம்மால் முடியாது என்ற சிந்தனைப் போக்கை தவிர்த்து, செய்யக்கூடிய உதவிகளை பிறருக்கு செய்து, வயோதிபத்தை அதனால் வரும் வியாதிகளை முடியுங்கள். மகிழ்வாக வாழுங்கள்.. சிந்தியுங்கள்.... செயற்படுங்கள்......

-யாழ். ராதவல்லி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சதாம் இருந்த பள்ளிவாசல்

# அமெரிக்கப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது



ஈராக்கின் நஜாவ் நகரில் கிளர்ச்சித் தலைவர் அல்சதார் மற்றும் அவரது ஆதரவுப் படைகள் கடந்த 16 நாட்களாகத் தங்கியிருந்த பள்ளிவாசலை அமெரிக்கா தலைமையிலான படைகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன.

அமெரிக்கப் படைகளின் தலைமையின் கீழ் ஈராக்கியப் பொலிஸார் பள்ளிவாசலுக்கு சென்றவேளை எவ்வித எதிர்ப்பும் பள்ளிவாசலுக்குள் இருந்து வரவில்லையென ஈராக்கிய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனாலும் பள்ளிவாசலுக்கு வெளியில் சதார் ஆதரவுப் படையினர் தமது பாதுகாப்பு நிலைகளை அமைத்துள்ளதாகவும், அவர்களை அமெரிக்கத் தாங்கிகள் மற்றும் ஆயுதம் தரித்த வாகனங்கள் சுற்றி வளைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிவாசலுக்கு சிறிய சேதமே ஏற்பட்டுள்ளதாகவும், அதிலும் இரண்டு பக்கக் கதவு மற்றும் நினைவுத்தூபி என்பனவே சேதமடைந்துள்ளதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

சுமார் ஆயிரம் சதார் ஆதரவாளர்கள சதாரின் படத்தை தாங்கிய வண்ணமும், சுலோகங்களை கையில் ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். இவர்கள் எவரிடமும் ஆயுதங்கள் இருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிவாசலுக்குள் இருந்த பொறியியலாளர்கள் மற்றும் மருத்துவர்கள் ஆகியோர், தாம் பள்ளிவாசலுக்குள் சென்றவேளை தம்மை வரவேற்றதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார். அத்துடன், சதாரும் அவரது படையினரும் தமது பாதுகாப்புக்காக தம்மை மனிதக் கேடயங்களாக வைத்திருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பள்ளிவாசல் அமெரிக்க தலைமையிலான படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் சதார் எங்குள்ளார் என்பது ஒருவருக்கும் தெரியவில்லையெனவும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை ஈராக்கின் பல பகுதிகளிலும், ஈராக் மற்றும் அமெரிக்கப் படைகளுக்கெதிராக பரவலான முறையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஈராக்கின் தென் பகுதியிலுள்ள ஹில்லா நகரத்தில் ஈராக்கிய பொலிஸ் தொடரணி ஒன்று தாக்கப்பட்டதில் ஒரு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் ஆறுபேர் காயமடைந்தனர்.

பாக்தாத்தில் அமெரிக்கப்படையினர் சென்ற வாகனம் மீது நடத்தப்பட்ட றொக்கற தாக்குதலில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் காயமடைந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

பலூஜா நகரில் இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில், அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த சிலர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டபோதும் மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை.




# 280 கிராம் எடையுடன் பிறந்த குழந்தை

(வாஷிங்ரன்)

உலகிலேயே மிகக் குறைந்த எடையுடன் பிறந்த பெண் குழந்தைக்கு இப்போது வயது 14. இந்தக் குழந்தை 1989ஆம் ஆண்டு பிறந்த போது அதன் எடை 280 கிராம் மட்டுமே இருந்தது. ரின்னில் அடைக்கப்பட்ட சோடா எடையை விட குறைவு. 10 அங்குல நீளம் இருந்தது.

இந்தக் குழந்தை பிழைக்கும் என்பதே சந்தேகம் என்று பிரசவம் பார்த்த டொக்டர்கள் அப்போது கூறினர். கர்ப்பமான 7 மாதத்தில் அந்தக் குழந்தை பிறந்தது. ஒரு மாத காலம் வெண்டி லேட்டரிலும், பிறகு 3 மாதம் வைத்தியசாலையிலும் தங்கி இருந்தது.

அமெரிக்காவில் இல்லினாய்ஸ் நகரில் உள்ள லயோலா பல்கலைக்கழக வைத்தியசாலையில் இந்தக் குழுந்தை பிறந்தது. அந்த வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுத்த டொக்டர் ஜோனாதன் முரஸ்காஸ் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மேட்லின்மன் என்று பெயர் சூட்டப்பட்ட அந்தக் குழந்தை தப்பிப் பிழைத்ததோடு, இன்று சாதாரண சிறுமி போல இருக்கிறார்.

அவளுக்கு இப்போது வயது 14, 4 அடி உயரம் இருக்கிறாள். அவள் வயதுக்கு இந்த உயரம் குறைவுதான்.

"மேட்லின்மன் போன்ற குழந்தைகள் உயிர் பிழைப்பதற்கு 5 முதல் 10 சதவீத வாய்ப்புக்களே உள்ளன." இவ்வாறு டொக்டர் ஜோனாதன் கூறினார்.

# மேலும் முப்பதினாயிரம் அகதிகள் சூடானிலிருந்து சாட்டிற்கு சென்றனர்

சூடானில் அரசுக்கு ஆதரவான கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலையடுத்து மேலும் முப்பதாயிரம் அகதிகள் அருகிலுள்ள சாட்டிற்கு இடம்பெயர்ந்துள்ளதாக சூடான் அரசை ஐ.நா. எச்சரித்துள்ளது.

இவ்வாறு சாட்டிற்கு சென்ற அகதிகள் சாட்டிலுள்ள மஸ்ற்ரேறி கிராமத்தில் ஒன்று கூடியுள்ளதாக யு.என்.எச்.சி.ஆர் தெரிவித்தது.

ஐ.நா.விற்கு சூடான் அரசு அளித்த உறுதிமொழியின்படி இந்த மாத முடிவிற்குள் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களையவேண்டுமென்பது குறிப்படத்தக்கது.

சுமார் 1,80000 இடம் பெயர்ந்த மக்கள் நிர்க்கதியான நிலையில் சாட்டின் எல்லைப்பகுதியில் உள்ளனர்.

இதேவேளை சாட் பகுதிக்கு சென்றுள்ள அகதிகளை யு.என்.எச்.சிஆரின் பிரதிநிதி சந்தித்ததாகவும் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

ஐ.நா.சபைக்கு உறுதியளித்தபடி ஜான்ஜாவீட் ஆயதக்குழுக்களின் ஆயுதங்களை சூடான் அரசாங்கம் இதுவரை களையாத நிலையில் அங்கு பாதுகாப்பு நிலைமைகள் இன்னமும் மேம்படவில்லையெனவும் தகவல்கள் தெரிவித்தன.

சூடானில் எவ்வித சட்டம் ஒழுங்கும் இல்லை. அங்கு ஆயுதங்கள் மட்டுமே கோலோச்சுவதாக அண்மையில் டர்பூருக்கு சென்று வந்த பத்திரிகையளரான பற்றிக் சிமித் தெரிவித்தார்.

டர்பூர் பிரதேசத்தில் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்காக எந்தவொரு அறிகுறியும் தென்படவில்லையெனவும், எல் - பசீர் என்ற இடத்தில் மீளவும் ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களை மீளச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தனரெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் முப்பதாம் திகதி சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் சூடான் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றவுள்ளதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜக்சிரோ நாளை சூடானுக்கு இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சரின் சூடான் விஜயத்துக்கான நோக்கம், அங்கு எவ்வாறான உதவிகளை வழங்கலாமென்பதனை ஆராய்வதற்கும், பாதுகாப்பு தொடர்பாக அடுத்து என்ன செய்யலாம் என்பதனை தெரிந்து கொள்வதற்குமே என பி.பி.ஸியின் போல் றெனோலட் தெரிவித்தார். இதேவேளை, கடந்த வியாழக்கிழமை நைஜீரிய செனட் தமது படையினர் 150 பேரை டர்பூருக்கு அனுப்புவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆபிரிக்க யூனியன் தமது படைகளை 1800 ஆக அதிகரிக்க விருப்பம் தெரிவித்த போதிலும் அதனை சூடான் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.



# அனாதையாக தவிக்கும் செல்லப்பிராணிகள்

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கடும் சூறாவளிக் காற்று வீசியது. இதில் ஆயிரக் கணக்கான வீடுகள் சேதமடைந்தன.



இதனைத் தொடர்ந்து ஏராளமானவர்கள் சேதமடைந்த வீடுகளைவிட்டு வேறு இடத்துக்கு குடிபோய்விட்டனர். அவர்கள் வளர்த்த செல்லப்பிராணிகள் பலவற்றையும் விட்டுச் சென்றுவிட்டனர்.

அனாதைகளாகத் திரியும் அந்தச் செல்லப் பிராணிகளை அங்குள்ள ஒரு நிறுவனம் தத்தெடுத்து பாதுகாத்து வருகிறது. பிறந்து 5 நாட்களேயான ஒரு அணில் குஞ்சு தனது தாயை இழந்து வாடுகிறது. அந்த அணில் குஞ்சுக்கு ஊசிக் குழாய் மூலம் ஒரு ஊழியர் பால் கொடுத்து வருகிறார்.

# கப்பல் படை தளபதிக்கு இளம் பெண்கள் வரவேற்பு!

தாய்லாந்து தனது கப்பல் படையை வலுவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, தாய்லாந்து கடற்படையினருக்கு ரஷ்யா பயிற்சியளிக்கவும் முடிவு செய்துள்ளது.



தாய்லாந்தின் கப்பல் படையைச் சேர்ந்த "தக்ஷின்", "செயில்பரி" என்ற 2 கப்பல்கள் ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் துறைமுகத்துக்கு வந்துள்ளன.

அந்தக் கப்பல்களில் நூற்றுக்கணக்கான தாய்லாந்து வீரர்களும், கப்பல் படை தளபதி தும்ரோங் சாக்கும் [illegible]. கப்பல் படை தளபதிக்கு ரஷ்ய இளம் பெண்கள் [illegible] வரவேற்பளித்தனர்.

## நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

**மத்திய பிரிவு**- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

**மேற்பிரிவு** - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். - நமது ஈழநாடு பணிமனை, யாழ் சாலை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தூயவனின் யுத்த காண்டம் கிளிநொச்சியில் வெளியீடு!

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் மருத்துவத்துறை மிகக் குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சி பெற்றிருக்கின்றது. பல்வேறு இன்னல் களைச் சந்தித்துப் பல உபகரணங்களைப் பெற்று மருத்துவத் துறை அற்புதமான சாதனைகளைப் படைத்திருக்கிறது என்று விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

மருத்துவப் போராளி தூயவனின் 'யுத்த காண்டம்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமாலை 4.45 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் யுத்த காண்டம் நூல் வெளியீட்டு விழா ஆரம்பமாகியது.

நிகழ்வின் பொதுச் சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைக்க விழாச் சுடரினை டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைகளின் பொறுப்பாளர் மனோஜ் ஏற்றிவைத்தார்.

மருத்துவ கலாநிதி சுயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில் நூலின் முதற் பிரதியை மருத்துவ கலாநிதி கெங்காதரன் வெளியிட்டு வைக்க, மருத்துவ கலாநிதி எழுமதி கரிகாலன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் வழங்கினார். நூலின் மதிப்பீட்டுரையை மருத்துவ கலாநிதி சிவபாலன், ஆய்வுரையை மு.திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்த்தினர்.

வெளியீட்டுரையில் க.வே.பாலகுமாரன் மேலும் குறிப்பிடுகையில்-

உலகப் போரின் வரலாறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் மிகப்பெரிய சாதனையைப் படைத்திருக்கிறோம். எமது நீண்ட போராட்டத்தின் வலுத் தெரியாது அரசு தறிகெட்டு நிற்கின்றது.

எமது போராட்டத்தின் ஊடாக போர்ப்பணியை பதிவுசெய்து வெளிப்படுத்தும் பணியில் தூயவனின் 'யுத்தகாண்டம்' பெரும் பணியை ஆற்றி இருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒலிம்பிக் பதக்க விபரம்




| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 1[illegible] | 14 | 12 | 45 |
| சீனா | 18 | 13 | 10 | 41 |
| ஜப்பான் | 12 | [illegible] | 5 | 22 |
| அவுஸ்ரேலியா | 11 | 6 | 10 | 27 |
| ஜேர்மனி | 9 | 7 | 11 | 27 |
| பிரான்ஸ் | 6 | 6 | 7 | 19 |
| இத்தாலி | 6 | 6 | 5 | 17 |
| உக்ரெயின் | 6 | 2 | 3 | 11 |
| ரஷ்யா | 5 | 13 | 14 | 32 |
| தென்கொரியா | 5 | 10 | 4 | 19 |
| பிரிட்டன் | 5 | 6 | [illegible] | 17 |
| நெதர்லாந்து | 3 | 5 | 5 | 13 |
| ருமேனியா | 3 | 0 | 2 | 5 |
| கிறீஸ் | 3 | 0 | 1 | 4 |
| துருக்கி | 3 | 0 | 1 | 4 |
| ஹங்கேரி | 2 | 3 | 1 | 6 |
| ஸ்லோவாக்கியா | 2 | 2 | 1 | 5 |
| தாய்லாந்து | 2 | 0 | 2 | 4 |
| பலாரஸ் | 1 | 2 | 4 | 7 |
| போலந்து | 1 | 2 | 3 | 6 |
| இந்தோனேஷியா | 1 | 1 | 2 | 4 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 2 | 4 |
| சிம்பாப்வே | 1 | 1 | 1 | 3 |
| எதியோப்பியா | 1 | 1 | 0 | 2 |
| ஜோர்ஜியா | 1 | 1 | 0 | 2 |
| பல்கேரியா | 1 | 0 | 4 | 5 |
| சுவிற்சர்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| நோர்வே | 1 | 0 | 0 | 1 |
| நியூஸிலாந்து | 1 | 0 | 0 | 1 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 1 | 0 | 0 | 1 |

## தேசிய எழுச்சி பேரவையின் சங்கம நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச கோட்ட பேரவையின் கோட்ட பிரதேச பேராளர்கள் பங்குபற்றும் மாபெரும் சங்கம நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி, வறணி, கைதடி போன்ற பல்வேறு பகுதிகளின் பேராளர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தமிழ் தேசிய படை உரிமை கோரியதாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு காயங்கேணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு தமிழ்த் தேசிய படை என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளதாக 'ஏசியன் ரிபியூன்' என்ற இணையத் தளம் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு - ஏசியன் ரியூபின் சஞ்சிகைக்கு தொலைபேசி மூலம் இந்த உரிமை கோரலை விடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும், அது எந்தளவுக்கு உறுதிப்படுத்தக்கூடிய தகவல் என்பது தொடர்பாக ஏசியன் ரிபியூன் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்க அமைச்சரவை உபகுழு!

(கொழும்பு)

அண்மைக்காலமாக அதிகரித்துள்ள அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவை உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த உப குழு கடந்த அமைச்சரவைக் கூட்டம் நடந்த வேளையிலேயே அமைக்கப்பட்டது.

அமைச்சரவைக்கூட்டத்தின் முடிவின்படி அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருப்பதைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக பிரேசிலிலிருந்து 25000 மெற்றிக் தொன் சீனியை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், மற்றும் பல அத்தியாவசியப் பொருட்களாகன அரிசி, உருளைக்கிழங்கு, மற்றும் பெரிய வெங்காயம் போன்றவற்றையும் இறக்குமதி செய்து உள்ளூரில் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி...

மீள்குடியேற்ற பதில் அமைச்சராக நிமல் சிறிபால டி சில்வாவும், பாடசாலைகள் பதில் அமைச்சராக மகிந்த சமரவீரவும், உயர் கல்வி பதில் அமைச்சராக தினேஷ் குணவர்த்தனவும் ஜனாதிபதி நாடு திரும்பும்வரை கடமையாற்றுவார்கள் என ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பலம்மிக்க...

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 44 ஆவது இடத்திலேயே வரிசைப்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## பாவாவின் வித்துடல்...

இருவரது வித்துடல்களும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனைகளின் பின்னர் நேற்று விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இரண்டு வித்துடல்களும் வைத்தியசாலையிலிருந்து கொக்கட்டிச் சோலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது [illegible]முனை இறங்குதுறை வரை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுப் பிரதிநிதிகளின் கண்காணிப்பில் பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை வாவியூடாக எடுத்துச்செல்லப்பட்ட இரண்டு வித்துடல்களும் கொக்கட்டிச்சோலையிலுள்ள விடுதலைப்புலிகளின் மாவட்டச் செயலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

இதன் பின்னர் நேற்றிரவு இருவரதும் வித்துடல்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இதில் பாவாவின வித்துடல் முனைக்காட்டிற்கும், யோகாவின் வித்துடல் வெல்லாவெளிக்கும் எடுத்துச்செல்லப்பட்டது.

இன்று பாவாவின் வித்துடல் அம்பாறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல் பொறுப்பாளர் பாவாவின் மறைவு குறித்து அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் செயலர் அனுதாபம் வெளியிட்டுள்ளார்.

அவர் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம்உறவுகள் பாரதூரமான விதத்தில் பாதிக்கப்பட்டிருந்த வேளையில் அதனை உரிய முறையில் கையாண்டு பெரும் பதற்ற நிலைகளை தவிர்க்கச் செய்தவர் என அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் செயலர் ஐ.எம் இப்ராகிம் நினைவு குறிப்பிட்டுள்ளார்.

வட்டமடு காணிப்பிரச்சினை மற்றும் பொத்துவில் காணிப் பிரச்சினை போன்றவற்றின் போது ஒவ்வொரு காணிக்கும் விஜயம் செய்து இரண்டு சமூகங்களுக்குமிடையில் நல்லுறவு பேண பாவா வழிவகுத்தார்.

எனவே, பாவாவின் இழப்பானது தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கும் பேரிழப்பாகும் என ஐ.எம்.இப்ராகிம் குறிப்பிட்டுள்ளார்.

### கதிர்காமருக்...

செய்யும் குண்டு துளைக்காத காருக்குப் புதிதாக ஒவ்வொன்றும் ஒரு லட்சத்து 27 ஆயிரம் ரூபா பெறுமதியான சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

நிலக்கண்ணிகள் மூலம் தாக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்களில், பாதுகாப்பை உறுதிப்படுத்தவே இவரது காருக்கு பெறுமதிமிக்க சக்கரங்களை அரசாங்கம் பொருத்தியதாகத் தெரியவருகிறது.

### மாங்கேணி...

யளிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, வாழைச்சேனைப் பிரதேசத்தில் இராணுவத்தினர் நேற்றுக்காலை தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை மாங்கேணிக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் படையினர் மீது கிரனேட் வீசிவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட சம்பவத்தையடுத்து இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

### ஆபத்தான...

யூடாகச் சென்றுகொண்டிருந்தபோது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு, கிளைமோர் தாக்குதல்களின்போது- விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது இவர்களுடன் கூடச் சென்றிருந்த பெண் போராளி வேணுகா படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்[illegible] பெற்று வருகிறார்.

வேணுகாவின் உடல்நிலை முன்னரைவிட தற்போது தேறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள் மீதான...

அரசாங்க உயர்மட்ட ஆதரவுடன் நடைபெறும் இத்தகைய தாக்குதல்களால் விடுதலைப் புலிகள் சீற்றமடைந்து மீளவும் யுத்தத்தை ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்த்தே இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா, கிழக்கில் வன்முறைகள் தொடர்ந்தால் படைகளை அனுப்பி கட்டுப்படுத்துவேன் எனக் கூறியிருந்ததன் பின்னணியில் பல தாக்குத[illegible] சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மீதும் - மற்றும் இனந்தெரியாத நபர்களாலும் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்றுப்படி - மீளவும் கிழக்குக்கு படைகளை அனுப்பவும் -

புலிகளை யுத்தத்துக்குள் இழுக்கவும் மேற்கொள்ளப்படும் சூழ்ச்சித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டன என்றே கருதப்படுகிறது.

பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் அரசாங்கம் - நாட்டு மக்களை திசைதிருப்பும் நோக்கில் மீளவும் பதற்றமான சூழலை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேட முனைவதாகவும் அந்த இணையத் தளத் தகவல் மேலும் தெரிவித்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.